MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00

Cardia

# மக்கள் 50 குரல்

Cardia

சென்னை – 12.03.2025 – புதன்
✱ மலர் – 52 ✱ இதழ் – 188

நடுநிலை நாளேடு

Regd. No. TN/CC(S)DN/122/24-26
RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/24-26



# தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ.360 உயர்வு

சென்னை, மார்ச் 12–

கடந்த வாரம் ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்ட தங்கத்தின் விலை சனிக்கிழமை ரூ.80 உயர்ந்து ஒரு சவரன் ரூ.64,320க்கு விற்பனை செய்யப்பட்டது. வார துவக்க நாளான, நேற்று முன்தினம் மார்ச் 10–ம் தேதி தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு சவரன் ரூ.64,400க்கும், ஒரு கிராம் ரூ.8,050க்கும் விற்பனை செய்யப்பட்டது.

நேற்று (11–ந் தேதி) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.64,160க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில், இன்று 22 காரட் ஆபரண தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.360 உயர்ந்து ஒரு சவரன் ரூ.64,520க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிராமுக்கு ரூ.45 உயர்ந்து ரூ.8,065க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை ஒரே நாளில், சவரனுக்கு ரூ.360 உயர்ந்து நகைப்பிரியர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# சட்ட விரோத ஊடுருவல்; டெல்லியில் 20 வங்கதேசத்தினர் கைது

புதுடெல்லி, மார்ச் 12–

டெல்லியில் சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேசத்தினர் 20 பேரை டெல்லி போலீசார் கைது செய்தனர்.

டெல்லி அரசியலில் வங்கதேசத்தவர் சட்டவிரோத குடியேற்றம் ஒரு சூடான விஷயமாக உள்ளது. போலீசாரும் ஆங்காங்கே ரெய்டு நடத்தி அவர்களை கைது செய்து வருகின்றனர். டெல்லியில் பி.வி.சி., மார்க்கெட், சுல்தான் பூரி, ஹனுமான் மந்திர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் போலீசார் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேசத்தினர் 20 பேரை போலீசார் கைது செய்தனர். இது குறித்து போலீசார் கூறுகையில், கைது செய்யப்பட்ட நபர்கள் சட்டவிரோதமாக ஆவணங்களை தயாரித்து, நாட்டிற்குள் நுழைந்து வசித்து வந்துள்ளனர். அவர்களிடம் இருந்து போலி ஆவணங்களை பறிமுதல் செய்து விசாரித்து வருகிறோம் என்று கூறினார்.

# அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்தியா வருகை

நியூயார்க், மார்ச் 12–

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் இந்த மாத இறுதியில் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்சின் மனைவி உஷா, இந்தியாவை பூர்விகமாகக் கொண்டவர். இவரது பெற்றோர் கிரிஷ் சிலுகுரி – லட்சுமி சிலுகுரி ஆகியோர் 1970களின் பிற்பகுதியில் ஆந்திர பிரதேசத்தில் இருந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள். உஷாவும் ஜே.டி.வான்சும் யேல் சட்டக் கல்லூரியில் படிக்கும்போது சந்தித்துக் கொண்டனர்.

அமெரிக்க துணை அதிபராக ஜே.டி. வான்ஸ் பொறுப்பேற்ற பிறகு உஷா தனது குடும்பத்தோடு முதல்முறையாக இந்தியா வர இருக்கிறார். இவர்களின் இந்திய பயணம் குறித்த திட்டங்களை பொலிட்டிகோ செய்தி வெளியிட்டுள்ளது. "வான்ஸ் இந்த மாத இறுதியில் இரண்டாம் பெண்மணி உஷா வான்ஸ் உடன் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார். கடந்த மாதம் பிரான்ஸ் மற்றும் ஜெர்மனிக்குப் பயணம் மேற்கொண்ட ஜே.டி. வான்ஸ், இரண்டாவது வெளிநாட்டுப் பயணமாக இந்தியா செல்ல உள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு பணியிடங்களை நிரப்பாமல் ஓய்வுபெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதா?

## திமுக அரசிற்கு எடப்பாடி பழனிசாமி கண்டனம்

சென்னை, மார்ச் 12–

காலியாக உள்ள அரசுப் பணியிடங்களை நிரப்பாமல் ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதா? என தி.மு.க. அரசிற்கு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

2021–ம் ஆண்டு தேர்தல் நேரத்தில் ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவராக நிறைவேற்ற முடியாத பல்வேறு வாக்குறுதிகளை அளித்து, வெற்றி பெற்று கடந்த 4 ஆண்டுகளாக நிர்வாகத் திறமையற்ற ஆட்சியை நடத்தி வருகிறார். 2021 திமுக தேர்தல் அறிக்கையில், அரசு துறைகளில் 5.50 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும், வாக்குறுதி எண்.187ன்படி தமிழகம் முழுவதும் உள்ள அரசு அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களில் 3 லட்சத்து 50 ஆயிரம் தமிழக இளைஞர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் வாக்குறுதி அளித்தார்.

ஆனால், உண்மையில் தமிழக அரசுத் துறைகளில், பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களே ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பணியமர்த்தப்படுகின்றனர். குறிப்பாக, தலைமைச் செயலகத்திலேயே பணி ஓய்வு பெற்று ஓய்வூதியம் வாங்கிக்கொண்டிருக்கும் பிரிவு அலுவலர்கள், சார்பு, துணை, இணை மற்றும் கூடுதல் செயலாளர்கள் நிலையில் பலர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு, மாதம் 1 லட்சம் தொகுப்பு ஊதியத்தில், தற்காலிக ஆலோசகராக பணிபுரிவதற்கு, தலைமைச் செயலகத்தில் துணைச் செயலாளர் பதவி நிலைக்கு குறையாத பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் 21.3.2025க்குள் விண்ணப்பிக்க நாளிதழ்களில் விளம்பரம் வந்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் எப்போது லட்சக்கணக்கான காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கும் என்று, தகுதி வாய்ந்த லட்சக்கணக்கான இளைஞர்கள் தவமிருக்கும் நிலையில், அவர்களின் தலையிலும், மற்றும் தற்போது பதவி உயர்விற்காக காத்திருக்கும் நூற்றுக்கணக்கான அரசு ஊழியர்களின் தலையிலும், தி.மு.க. அரசின் இந்த விளம்பரம் பேரிடியாக விழுந்துள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உடனடியாக தேர்வு நடத்தி அரசுத் துறைகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் குறித்த காலத்தில் நிரப்பி, படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

# கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கு ரூ.2000 கோடி ஒதுக்குங்கள்: பாராளுமன்றத்தில் விஜய் வசந்த் எம்.பி. கோரிக்கை

புதுடெல்லி, மார்ச் 12–

இயற்கை எழில் நிறைந்த கன்னியாகுமரி மாவட்டத்தை உலகின் தலை சிறந்த சுற்றுலா தலமாக மாற்றிட மத்திய அரசு முன் வரவேண்டும். அதற்காக சிறப்பு நிதியாக ரூ.2 ஆயிரம் கோடியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும் என விஜய் வசந்த் எம்.பி. கேட்டுக்கொண்டுள்ளார். மக்களவையில் 377–ம் விதியின் கீழ் இந்த முக்கியமான கோரிக்கையை விஜய் வசந்த் எம்.பி. வைத்தார்.

இதுகுறித்து விஜய் வசந்த் எம்.பி. பேசியதாவது:–

கன்னியாகுமரி மாவட்டம் இயற்கை எழில் கொஞ்சும் மாவட்டம். மிக தெளிவான கடற்கரைகள், விண்ணை எட்டி நிற்கும் மலைகள், அருவிகள், நீர் நிலைகள் என்று கண் கவர் இயற்கை எழிலை கொண்டது கன்னியாகுமரி மாவட்டம். விவேகானந்தர் பாறை, திருவள்ளுவர் சிலை, திற்பரப்பு அருவி, மாத்தூர் தொட்டி பாலம், பத்மநாபபுரம் அரண்மனை போன்ற உலக புகழ் வாய்ந்த சுற்றுலா மையங்கள் இங்குள்ளது. கடந்த வருடம் மட்டும் 2 லட்சத்திற்கு மேற்பட்ட உள்நாட்டு சுற்றுலா பயணிகளும், சுமார் 50 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் குமரிக்கு வருகை தந்துள்ளனர்.

ஆனால் இத்தகைய பெரும் கூட்டத்தினை எதிர்கொள்வதற்கான அடிப்படை கட்டமைப்பு இல்லாமல் இங்குள்ள சுற்றுலா தலங்கள் காணப்படுகின்றன. மேலும் சுற்றுசூழலை மேம்படுத்தவும், பாரம்பரிய மற்றும் இயற்கை தளங்களை பாதுகாக்கவும் வேண்டியது கட்டாயம்.

கன்னியாகுமரி மாவட்டம் மேம்படுத்தப்பட்ட ஒரு சுற்றுலா தலமாக மாறுவதன் மூலம் இங்குள்ள மக்களும், சிறு, குறு வணிகர்களும் பயனடைந்து, வேலை வாய்ப்பினையும் பெருக்க இது காரணமாக அமையும்.

இதனை கருத்தில் கொண்டு மத்திய அரசு கன்னியாகுமரியின் சுற்றுலா தலங்களை மேம்படுத்த பிரேத்யேக கவனத்தை செலுத்த வேண்டும். மேலும் இதற்காக ரூ.2 ஆயிரம் கோடியினை சிறப்பு நிதியாக ஒதுக்கி உலக சுற்றுலா வரைபடத்தில் குமரியை இடம் பெற செய்ய ஆவன செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விஜய் வசந்த் எம்.பி. கூறினார்.

# அண்ணா தி.மு.க. வழக்கறிஞரை மறித்து தாக்கிய தி.மு.க.வினர்; வேடிக்கை பார்த்த போலீஸ்: எடப்பாடி கடும் கண்டனம்

சென்னை, மார்ச் 12–

அண்ணா தி.மு.க. வழக்கறிஞரை தி.மு.க.வினர் மறித்து சரமாரியாக தாக்கியதை வேடிக்கை பார்ப்பதா என போலீசாருக்கு எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசின் காவல்துறையினருக்கு கண்டனம் தெரிவித்து அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், செங்கல்பட்டு நகர தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளரும், கழக வழக்கறிஞருமான அனிருதன், நேற்று காலை (11–ந் தேதி) வழக்கம்போல், தனது வீட்டிலிருந்து கார் மூலம், செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு செல்லும் வழியில் ராட்டினகிணறு என்ற இடத்தில் தி.மு.க.வினர், வழக்கறிஞர் அனிருதன் காரை வழிமறித்து, காரை சேதப்படுத்தியதோடு, அவரையும் தாக்கியுள்ளனர்.

அங்கே பாதுகாப்புப் பணியில் இருந்த காவல்துறையினர் இதனை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த நிலையில், அவ்வழியாகச் சென்ற வாகன ஓட்டிகள் அனிருதனை மீட்டு, அவரை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

நகர தகவல் தொழில்நுட்பப் பிரிவுச் செயலாளரும், கழக வழக்கறிஞருமான அனிருதன் மீது தாக்குதல் நடத்தியபோது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தி.மு.க. அரசின் காவல்துறையினருக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தாக்குதல் நடத்திய திமுகவினர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க திமுக அரசை வலியுறுத்துகிறேன்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அனிருதன் பூரண நலம் பெற்று வீடு திரும்ப எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

மக்கள் குரல்

12–03–2025

# பாகிஸ்தானில் ரயில் கடத்தல், அதிர்ச்சியில் உலகம்

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் நிகழ்ந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயில் கடத்தல் சம்பவம், உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பயணிகள் ரயிலை குறிவைத்த இந்த தாக்குதல், பாகிஸ்தானின் உள்துறை நிலைமை மற்றும் பலுசிஸ்தான் மாகாணத்தில் அதிகரித்து வரும் கிளர்ச்சி நடவடிக்கைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

மார்ச் 11 ஆம் தேதி பாகிஸ்தானின் குவெட்டா நகரில் இருந்து பெஷாவர் நோக்கி புறப்பட்ட ஜாபர் எக்ஸ்பிரஸ், முஷ்கப் பகுதி சுரங்கப் பாதையை அடைந்தபோது தண்டவாளம் வெடிவைத்து தாக்கப்பட்டது. இதனால் ரயில் தடம் புரண்டது. இந்தச் சூழ்நிலையில் பலுசிஸ்தான் விடுதலை படையினரான (BLA) தீவிரவாதிகள் ரயிலை முற்றுகையிட்டு, பயணிகளை பிணைக் கைதிகளாக பிடித்தனர்.

இந்த ரயிலில் பல பாகிஸ்தான் பாதுகாப்புப் படை வீரர்கள் பயணம் செய்திருந்த நிலையில் அவர்கள் மற்றும் தீவிரவாதிகள் இடையே கடுமையான துப்பாக்கிச் சண்டை வெடித்தது. இதன் காரணமாக 30 பாகிஸ்தான் பாதுகாப்புப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும் 500க்கும் மேற்பட்ட பயணிகள் பிணைக்கைதிகளாக மாற்றப்பட்டனர்.

பாதுகாப்புப் படைகள் மற்றும் தீவிரவாதிகள் இடையே தொடரும் மோதல்களில் இதுவரை 16 தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை 104 பிணைக்கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர். இருப்பினும் இன்னும் பல பயணிகள் எங்கு இருக்கின்றனர் என்பதற்கான தகவல்கள் வெளிவரவில்லை.

இந்த தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தான் ராணுவம் மற்றும் காவல்துறையினர் அப்பகுதியில் மீட்புப் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். மலைவாசஸ்தலமாகவும் தொலைதொடர்பு வசதி இல்லாத பகுதியாகவும் இருப்பதால் மீட்புப் பணிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதற்காக பாதிக்கப்பட்ட பகுதிக்கு உதவி ரயில் அனுப்பப்பட்டுள்ளது.

குவெட்டா நகரிலிருந்து ஹெலிகாப்டர் மூலம் போலன் பாஸ் பகுதிக்கு விமான சேவைகள் இயக்கப்பட்டுள்ளன. சிபி நகரில் உள்ள அரசு மருத்துவமனையில் அவசர நிலை அறிவிக்கப்பட்டு, மருத்துவ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பலுசிஸ்தான் விடுதலைப் படை எச்சரிக்கை

பலுசிஸ்தான் விடுதலை படை (BLA) இந்த தாக்கலுக்கு பொறுப்பேற்றுள்ளது. கடந்த சில ஆண்டுகளில், பலுசிஸ்தான் மாகாணத்தில் கிளர்ச்சி இயக்கங்கள் தீவிரமாகி வருகின்றன.

பாகிஸ்தான் அரசின் அடக்குமுறைக்கு எதிராக பலுசிஸ்தான் விடுதலை படை (BLA) தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இந்த தாக்குதல், பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு மீது பல கேள்விகளை எழுப்புகிறது. பயங்கரவாதிகள் எந்தளவுக்கு அமைதியான இடங்களில் ஊடுருவியுள்ளனர் என்பதையும் பாதுகாப்பு அமைப்புகளில் உள்ள பலவீனங்களையும் இந்த சம்பவம் வெளிக்கொண்டு வந்துள்ளது.

பலுசிஸ்தானில் நடக்கும் கிளர்ச்சி நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியாமல் இருப்பது பாகிஸ்தான் அரசுக்கு பெரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச நாடுகளும் இந்தத் தாக்குதலை கண்டித்து பாகிஸ்தானின் உள்நிலை பாதுகாப்பு குறித்த கவலைகளை வெளிப்படுத்தியுள்ளன.

பலுசிஸ்தான் விடுதலை படை போன்ற குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைப்புகள் இந்த அச்சுறுத்தல்களை சமாளிக்க முடியும் என்கிற நம்பிக்கை குறைந்து வரும் நிலையில் இந்தத் தாக்குதல் சம்பவம் அந்நாட்டின் அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளில் பெரும் தாக்கம் ஏற்படும் என்பதும் உறுதி.

# பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் கிரிக்கெட் தொடர்: நியூசிலாந்து அணியின் கேப்டன் பிரேஸ்வெல்

வெலிங்டன், மார்ச்.12

9வது சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் தொடரில் துபாயில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இறுதி ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியாவிடம் தோற்று கோப்பையை கோட்டை விட்டது.

இதைத்தொடர்ந்து நியூசிலாந்து அணி, உள்ளூரில் பாகிஸ்தானுக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் தொடர் மற்றும் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் விளையாடுகிறது.

இதில் நியூசிலாந்து பாகிஸ்தான் அணிகள் இடையிலான முதலாவது 20 ஓவர் போட்டி கிறைஸ்ட்சர்ச்சில் வருகிற 16ந் தேதி நடக்கிறது. பாகிஸ்தானுக்கு எதிரான 20 ஓவர் தொடரில் ஆடும் நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. ஐ.பி.எல். தொடர் வருகிற 22ந் தேதி தொடங்குவதால் அந்த போட்டிக்குரிய அணிகளில் இடம் பிடித்துள்ள நியூசிலாந்து வீரர்களுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

கேப்டன் மிட்செல் சான்ட்னெர், டிவான் கான்வே, கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா மற்றும் வில்லியம்சன் ஆகியோர் இந்த தொடரில் இடம் பெறவில்லை. சாம்பியன்ஸ் கோப்பை போட்டியில் சிறப்பாக செயல்பட்ட ஆல்ரவுண்டர் மைக்கேல் பிரேஸ்வெல் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து 20 ஓவர் போட்டி அணி வருமாறு:

பிரேஸ்வெல் (கேப்டன்), பின் ஆலென், மார்க் சாப்மேன், ஜேக்கப் டப்பி, மிட்செல் ஹே, டேரில் மிட்செல், ஜேம்ஸ் நீஷம், டிம் ராபின்சன், பென் சியர்ஸ், டிம் செய்பெர்ட், சோதி மற்றும் மேட் ஹென்றி, ஜாக் போல்க்ஸ் (இருவரும் கடைசி இரு ஆட்டம் மட்டும்), கைல் ஜாமிசன், வில்லியம் ஓ ரூர்கே (இருவரும் முதல் 3 ஆட்டம்).

# பெண்கள் பிரிமீயர் லீக் கிரிக்கெட்: பெங்களூரு அணி ஆறுதல் வெற்றி

மும்பை, மார்ச்.12

பெண்கள் பிரிமீயர் லீக் கிரிக்கெட்டில் மும்பையை வீழ்த்தி பெங்களூரு அணி ஆறுதல் வெற்றி பெற்றது.

3வது பெண்கள் பிரிமீயர் லீக் (டபிள்யூ.பி.எல்.) கிரிக்கெட் போட்டி மும்பையில உள்ள பிராபோர்ன் ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் நேற்றிரவு நடந்த 20வது மற்றும் கடைசி லீக்கில் முன்னாள் சாம்பியன் மும்பை இந்தியஸ் அணி, நடப்பு சாம்பியன் பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை சந்தித்தது. இதில் வெற்றி பெற்றால் நேரடியாக இறுதிசுற்றுக்கு முன்னேறலாம் என்ற சூழலில் 'டாஸ்' ஜெயித்த மும்பை கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். இதன்படி முதலில் பேட் செய்த பெங்களூரு அணிக்கு மேகனாவும், கேப்டன் ஸ்மிர்தி மந்தனாவும் முதல் விக்கெட்டுக்கு 41 ரன்கள் எடுத்து அருமையான தொடக்கம் தந்தனர். மேகனா 26 ரன்னிலும், கேப்டன் மந்தனா 53 ரன்னிலும் (37 பந்து, 6 பவுண்டரி, 3 சிக்சர்) ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த வீராங்கனைகளும் அதிரடி காட்டவே பெங்களூரு அணியின் ஸ்கோர் 200ஐ நெருங்கியது. விக்கெட் கீப்பர் ரிச்சா கோஷ் 36 ரன்களும் (5 பவுண்டரி, ஒரு சிக்சர்), வேர்ஹேம் 31 ரன்களும் (10 பந்து, 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) விளாசினர்.

20 ஓவர் முடிவில் பெங்களூரு 3 விக்கெட்டுக்கு 199 ரன்கள் குவித்தது. கடைசி 4 ஓவர்களில் மட்டும் 65 ரன்கள் திரட்டினர். எலிஸ் பெர்ரி 49 ரன்களுடன் (38 பந்து, 5 பவுண்டரி, ஒரு சிக்சர்) களத்தில் இருந்தார்.



அடுத்து களம் இறங்கிய மும்பை அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்கு 188 ரன்களே எடுக்க முடிந்தது. இதனால் பெங்களூரு 11 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக நாட் சிவெர் 69 ரன்கள் (35 பந்து, 9 பவுண்டரி, 2 சிக்சர்) எடுத்தார். கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் 20 ரன்னில் கேட்ச் ஆனார். சினே ராணா 3 விக்கெட்டும், எலிஸ் பெர்ரி, கிம் கார்த் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். ஏற்கனவே அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து விட்ட பெங்களூருவுக்கு இது ஆறுதல் வெற்றியாகவே அமைந்தது.

லீக் சுற்று முடிவில் புள்ளிபட்டியலில் முதலிடத்தை உறுதி செய்த டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி நேரடியாக இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. 2வது, 3வது இடத்தை பிடித்த மும்பை, குஜராத் அணிகள் நாளை வெளியேற்றுதல் சுற்றில் மோதும். இதில் வெற்றி பெறும் அணி 2வது அணியாக இறுதி சுற்றை எட்டும்.

சிறுகதை

# பரிகாரம்....

ராஜா செல்லமுத்து

வேணுகோபால் தவறி விட்டார். அவருக்கான சடங்குகள் செய்ய வேண்டும். நல்ல மனிதர். அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று மந்திரப் பரிகாரங்கள் நடந்து கொண்டிருந்தன. காளிதாஸ் அதற்கான எல்லா நிலைகளிலும் உடன் இருந்தான்.

" தம்பி யாரு. எறந்து போனவருக்கு என்ன முறை

வேணும் ? " என்று பரிகாரம் செய்யும் நபர் கேட்க " இவரு தான் எறந்து போனவராடே மகன். "

என்று அங்கிருந்த ஒருவர் சொல்லத் தலையை ஆட்டினான் காளிதாஸ்.

" மத்த சொந்த பந்தமெல்லாம் வாங்க. ஆக வேண்டியதப் பாக்கணும் " என்று பரிகாரம் செய்பவர் சொல்ல,

"சொந்த பந்தமுன்னு யாரும் இல்லீங்க. எல்லாம் வெளிநாட்டுல இருக்காங்க. இந்தா இருக்காரே காளிதாஸ் இவர வச்சு எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்க "

என்று அங்கிருந்தவர்கள் சொல்ல காளிதாஸை உற்றுக் கவனித்தார் பரிகாரம் செய்பவர்.

" தம்பி , ஏன் இப்பிடி இருக்கீங்க? உங்க சொந்த பந்தமெல்லாம் ஏன் உங்க அப்பா இறப்புக்கு வரமாட்டாங்களா? இது தான் அவரோட கடைசிப் பயணம். இன்னைக்கு அவரோட முகத்தைப் பாக்கலன்னா, இனிமே என்னைக்கும் பாக்க முடியாது. ஏதாவது சொல்லி உங்க சொந்த பந்தங்கள வரச்சொல்லுங்க. நல்லதுக்கு சேரலன்னா கூட பரவாயில்ல. கெட்டதுக்கு சேந்திரனும். இதுதான் மனித தர்மம் " என்று உறவுகளின் உன்னதத்தை ஒப்பித்தார் பரிகாரம் செய்பவர். அதைக் கேட்டு எதுவும் பேசாமல் அமைதியாக உட்கார்ந்திருந்தான் காளிதாஸ்.

" என்னங்க . இவ்வளவு தூரம் சொல்றாரு. நீங்க எதுவும் பேசாம இருக்கிங்களே? பேசுங்க"

என்று சொல்ல காளிதாஸ் அப்பவும் பேசாமலே இருந்தான்.

" சரி, உங்களுக்குள்ள ஏதோ பிரச்சினை இருக்கு பாலே. அதில நாங்க தலையிட விரும்பல. ஆக வேண்டியதப் பாக்குறோம்" என்று பரிகாரங்கள் செய்து கொண்டிருந்தார்கள்.

" என்ன பணம் சம்பாதிச்சு என்ன பண்ண? இந்தப் பெரியவரு எறந்திட்டாரு. அவரோட மனைவியும் எப்பவோ தவறிட்டாங்க. குடிச்சும் குடிக்காம கெடந்தே இவரு இப்பிடி எறந்திட்டாரு. பணம்.. பணம்..ன்னு தான் இந்தக் குடும்பத்த சேந்தவங்க இருக்காங்க. கடைசிப் பயணத்துக்கு கூட யாருமில்லையே?

என்று ஆதங்கப்பட்டார்கள், உறவினர்கள். பரிகாரங்கள், சடங்குகள் செய்யப்பட்டு வேணு கோபால் எரியூட்டப்பட்டார். அன்று மாலை, வேணுகோபாலின் இறுதி மரியாதைக்கான செலவுகள் பட்டுவாடா செய்யப்பட்டன.

பரிகாரம், மந்திரம் செய்ய இவ்வளவு பணம். மாலை, கண்ணாடிப் பேழை வாங்குன செலவு இவ்வளவு. சாமியானா, டீ, காபி வாங்குன செலவு இவ்வளவு என்று பணத்தை பட்டுவாடா செய்து கொண்டிருந்தார்கள். வேணுகோபால் வீட்டின் அருகில் குடியிருக்கும் சுப்பையா கணக்கு வழக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

" தம்பி இன்னொரு செலவ மறந்திட்டேன்" என்று சுப்பையா சொல்ல " என்ன செலவு அண்ணே ? சொல்லுங்க குடுத்திரலாம். "

" அது வந்து ... வந்து....."தயங்கினார் சுப்பையா. "சொல்லுங்க... குடுத்திரலாம்" " காளிதாஸு க்கு பணம் குடுக்கணும் "

" ஓ... ஸாரி.... காளிதாஸுக்கு பணம் குடுக்கலையா? எவ்வளவு குடுக்கணும்? "

" ஒரு இருபதாயிரம் குடுக்கலாமா?"

"என்னது இருபதாயிரமா?"

" ஆமா தம்பி, நேத்து நைட்டு முழுதும் இருந்தாரு. காலையில இருந்து, எரிக்கிற வரைக்கும் கூடவே இருந்திருக்கிறாரு. வேல இருக்கு என்னால அப்பாவோட இறப்புக்கெல்லாம் வர முடியாது. நிறைய வேல இருக்குன்னு சொல்லிட்டிங்க. உங்க சகோதரியும் இங்க வரல அவங்களும் இதையே தான் சொன்னாங்க. அவங்க பங்கு பணத்த அனுப்பிட்டாங்க. இது உங்க பங்கு. நீங்க செய்ற வேல நீங்க இருந்து அப்பாவத் தூக்கிப் போடணும். உங்க கெளரவம். பதவி. பணம். வேலை. எல்லாம் உங்கள இங்க வர விடல. ஒரு மகனா நீங்க இருந்து செய்ற வேல இது .அதுவும் நீங்க இல்லாத இடத்த நிரப்பியிருக்காரு காளிதாஸ். வேணுகோபால் உங்க அப்பா தான ? அவருக்கு மகனா , நீங்க மகனா இருந்து செய்ற எல்லா வேலைகளை காளிதாஸ் சம்பளத்துக்கு மகனா இருந்து இத செஞ்சிருக்காரு. அவருக்கு இருபதாயிரம் குடுக்கிறது தப்பில்ல தம்பி "

என்று சுப்பையா சொல்ல

" சரி பணம் அனுப்புறேன். குடுத்திருங்க. "

என்று வெளிநாட்டில் இருந்தபடியே, தன் அப்பா வேணுகாபோல் இறப்புக்கான செலவு கணக்குகளைக் கேட்டு சுப்பையாவிடம் பேசிக் கொண் டிருந்தான், வேணுகோபாலின் உண்மையான வாரிசு அவர் பெத்த மகன் விஜய் சூர்யா.

MAKKAL KURAL (Independent National Tamil Daily)

# மக்கள் 50 குரல்

நடுநிலை நாளேடு

அறைகள் சொல்லும் கதைகள்

சென்னை – 12.03.2025 – புதன்
✱ மலர் – 52 ✱ இதழ் – 188

Regd. No. TN/CC(S)DN/122/24-26
RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/24-26



ரமலான்—12
நாளை மார்ச் 13
சென்னை
சஹர் – அதிகாலை 04.37 மணி
இப்தார் – மாலை 06.26 மணி

பல்சமய நல்லுறவு இயக்கம் தமிழ்நாடு
சமாதனமே சுக வாழ்வு
தலைவர்: முகமது ரபி

★ அனைத்து விவசாயிகளுக்கும் மழைக்கால நிவாரணம் ரூ.2,000

★ ரேஷன் அட்டைதாரர்களுக்கு இனி 2 கிலோ கோதுமை இலவசம்

‘நீட்’ பாடப்பிரிவில் சேரும் மாணவர்களுக்கு 100% கட்டண விலக்கு

# ஏழைக் குடும்பத் தலைவிகளுக்கு இனி ரூ.2500: புதுவை முதல்வர் ரங்கசாமி அறிவிப்பு

## வரியில்லா பட்ஜெட்: சட்டசபையில் தாக்கல்

**புதுச்சேரி, மார்ச் 12–**

**புதுச்சேரியில் அரசின் எவ்வித மாதாந்திர உதவித் தொகையும் பெறாத 21 முதல் 55 வயது வரை உள்ள ஏழை குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 தரப்படுகிறது. இந்த உதவித் தொகை இந்த நிதியாண்டு முதல் ரூ.2,500 ஆக உயர்த்தி தரப்படும் என்று முதல்வர் ரங்கசாமி அறிவித்துள்ளார்.**

இன்று 2025–26 நிதியாண்டுக்கான மாநில பட்ஜெட்டை முதல்வர் என். ரங்கசாமி சட்டப்பேரவையில் சமர்ப்பித்தார். இந்த ரூ. 13,600 கோடி பட்ஜெட்டை வரியில்லாத பட்ஜெட் என்றும் கூறினார்.

``மத்திய மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு இடையேயான நெருங்கிய ஒத்துழைப்பாலும், ஒருங்கிணைந்த முயற்சிகளின் காரணமாகவும், நமது அரசு கடந்த 4 ஆண்டுகளாக பல்வேறான நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது என்றார்.

யூனியன் பிரதேசத்தின் சொந்த வருவாய் வரவுகள் ரூ. 7,641,40 கோடி என்றும், மாநில பேரிடர் நிவாரண நிதி உள்பட மத்திய உதவி ரூ. 3,432.18 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. மத்திய சாலை நிதியாக ரூ. 25 கோடியும், மத்திய நிதியுதவி பெறும் திட்டத்தின்கீழ் ரூ. 400 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நிதிப் பற்றாக்குறையின் இடைவெளியைக் குறைக்க ரூ. 2,101.42 கோடி அளவிலான பேச்சுவார்த்தை கடன் உள்பட நிகரக் கடன் உச்சவரம்புக்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. ரூ. 13,600 கோடி மதிப்பிலான பட்ஜெட்டில், வருவாய் செலவினங்களுக்காக ரூ. 11,624.72 கோடியும், மூலதன செலவினங்களுக்காக ரூ. 1,975.28 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 2021–22 நிதியாண்டில் 1.66 சதவிகிதமாக இருந்த மூலதன செலவினம், இந்த பட்ஜெட்டில் 9.80 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட 10 மடங்கு அளவிலான அதிகரிப்பாகும்.

நடப்பு நிதியாண்டில் பாலின வரவுசெலவுத் திட்டத்துக்கு ரூ. 1,458 கோடியும், இளைஞர் முன்முயற்சிகளுக்கு ரூ. 613 கோடியும், பசுமை திட்டங்களுக்கு ரூ. 689 கோடியும் உள்பட சிறப்பு வரவுசெலவுத் திட்டங்களுக்கு ரூ. 2,760 கோடியும் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது’’ என்றும் அவர் கூறினார்.

இன்று பட்ஜெட்டில் முக்கிய அம்சங்கள் விவரம் வருமாறு:–

தென்னை சாகுபடி விவசாயிகளுக்கு இந்த ஆண்டு முதல் வானிலை அடிப்படையிலான பயிர் காப்பீடு



அறிமுகப்படுத்தப்படும். விவசாய தொழிலாளர் நலச்சங்கத்தில் பதிவு செய்துள்ள அனைத்து விவசாயத் தொழிலாளர்களுக்கும் மழைக்கால நிவாரணமாக ஆண்டுக்கு ரூ.2,000 வரும் நிதியாண்டு முதல் தரப்படும். வனமில்லா பகுதிகளில் 3 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

கடந்த 2015 முதல் 2021 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்மாமணி விருதுகள் வழங்கப்படும். புதிதாக சொற்பொழிவாளர், புகைப்படம்,

(4–ம் பக்கம் பார்க்க)

# திருச்சி பெல் நிறுவன பொதுமேலாளர் அலுவலகத்திற்குள் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை



**திருச்சி, மார்ச் 12–**

**திருச்சி ‘பெல்’ நிறுவன அலுவலகத்துக்குள் பொதுமேலாளர் ஒருவர் கள்ளத் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு உயிரிழந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.**

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் பகுதியில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான 'பெல்' இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் தமிழகம் மற்றும் வெளி மாநிலத்தை சேர்ந்த சுமார் 7,000 பேர் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிறுவனத்தில், பெல் கணேசபுரம் 8வது தெருவை சேர்ந்த சண்முகம் (50), இணைப்பில்லா குழாய் வடிவமைப்பு (எஸ்எஸ்டிபி) பிரிவில் பொது மேலாளராக பணிபுரிந்து வந்தார். இவரது மனைவி பார்வதி இப்பகுதியில் உள்ள தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிகிறார். இவர்களது ஒரே மகள் பொறியியல் படித்து வருகிறார்.

பெல் நிறுவனத்தில் பணியாற்றுபவர்களுக்கு பல்வேறு ஷிப்டுகள் அடிப்படையில் பணி நேரங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதிகாரிகளுக்கு மட்டும் காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை பணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சண்முகம் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை 8.30 மணிக்கு பணிக்கு சென்றுள்ளார். மாலை 4.30 மணிக்கு பணி முடிந்தும் வீடு திரும்பவில்லை. அவரது மனைவி மொபைல் போனில் தொடர்புகொண்ட போது அவர் போனை எடுக்கவில்லை. பெல் நிறுவனத்தை தொடர்புகொண்ட போது, அவரது அறைக் கதவு சாத்தியிருப்பதாக தெரிவித்தனர்.

பல இடங்களில் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள், காணாமல் போன சண்முகத்தை தேடி வந்தனர். அவர் எங்கும் இல்லாததால்,

அவரது மனைவி பார்வதி மீண்டும் பெல் நிறுவன உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளார். அவர்களின் உத்தரவின்படி அங்கிருந்த ஊழியர்கள் சண்முகம் அறைக்கு சென்றனர். அப்போது அறையின் கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்தது தெரியவந்தது. இதனையடுத்து இன்று அதிகாலை 1.30 மணிக்கு கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது, சண்முகம் அங்குள்ள சோபாவில், நெற்றிப் பொட்டில் துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் இறந்து கிடத்தார். சோபா அருகே ரத்தம் பெருகி ஓடி, உறைந்து கிடந்தது.

உடனடியாக 'பெல்' காவல்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த போலீசார் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். தற்கொலைக்கான காரணம் குறித்தும், அவருக்கு எப்படி துப்பாக்கி கிடைத்தது என்பது குறித்தும் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் சண்முகம் சுட்டுக்கொண்டு இறந்த துப்பாக்கிக்கு உரிய உரிமம் இல்லை. அது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி என்பதும் தெரிய வந்துள்ளது. சண்முகத்துக்கு இருதயநோய் பிரச்சினை இருப்பதும், அதற்குரிய சிகிச்சை பெற்று வருவதும் தெரிகிறது.

தொடர்ந்து சண்முகம் தற்கொலைக்கான காரணம் குறித்து பெல் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

தேசியக் கல்விக் கொள்கையால் தமிழ்நாட்டின் கல்வி முறையை சிதைக்க வேண்டாம்

# இருமொழிக் கொள்கையையே தமிழ்நாடு விரும்புகிறது: அமைச்சர் அன்பில் மகேஸ் உறுதி

**சென்னை, மார்ச் 12–**

**தேசிய கல்விக் கொள்கையால் தமிழ்நாட்டின் கல்வி முறையை சிதைக்க வேண்டாம், இருமொழிக் கொள்கையையே தமிழ்நாடு விரும்புகிறது என்று அமைச்சர் அன்பில் மகேஸ் மீண்டும் உறுதிப்பட தெரிவித்தார்.**

ஒரு கோடி மாணவர்களில் 15 லட்சம் பேர் மட்டுமே சிபிஎஸ்இ பள்ளிகளில் படிப்பதாகவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி இன்று வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே... தமிழ்நாட்டில் 1.09 கோடி மாணவர்கள் 58,779 பள்ளிகளில் மாநில பாடத்திட்ட கல்வியை தேர்வு செய்துள்ளனர். 1,635 சிபிஎஸ்இ பள்ளிகளில் 15.2 லட்சம் மாணவர்கள் மட்டுமே மும்மொழியை படிக்கின்றனர். 3வது மொழியை படிக்க அவசியம் இருந்தால், ஏன் இவ்வளவு பேர் மாநில பாடத்திட்டத்தை தேர்வு செய்துள்ளனர். தமிழ் என்பது மொழி மட்டுமல்ல, அது எங்களின் ஆணி வேரோடு ஒன்றாக கலந்ததும் கூட. தமிழ்நாட்டின் கல்விமுறை ஏற்கனவே சிறந்த தொழில்முனைவோர், சிந்தனையாளர்கள், கண்டு பிடிப்பாளர்களை உருவாக்கி வருகிறது. சிறப்பாக உள்ள தமிழ்நாட்டின் கல்விமுறையை தேசிய கல்விக் கொள்கை சீர்குலைக்கிறது. ஆங்கில வழிப் பள்ளிகளில் கூட, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாணவரும் தமிழை ஒரு பாடமாகப் படித்து அதில் திறமையானவர்கள். நமது பெருமைக்கு தமிழ், உலக வழிகாட்டியாக ஆங்கிலம் நமது முன்னேற்றம் மற்றும் சமத்துவத்திற்கான பாதை.

மாணவர்கள் ஏற்கனவே வலுவான இருமொழி அடித்தளத்துடன் சிறந்து விளங்கும்போது, தமிழ்நாட்டிற்கு கட்டாய 3ம் மொழி தேவையில்லை. இருமொழிக் கொள்கையையே தமிழ்நாடு விரும்புகிறது. தமிழ்நாட்டின் கல்வி முறை சிறப்பாக உள்ளது. தேசிய கல்விக்கொள்கையில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை விமர்சிப்பது தவறான வழிநடத்துதலாகும். கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு பாடத்திட்டம் மிகச் சிறந்த பலனை அளித்துள்ளது. உடைந்ததை ஒட்ட வைக்க நினைக்காதீர்கள்; நன்றாக செயல்படும் தமிழ்நாட்டின் கல்வி அமைப்பை மாற்ற வேண்டாம். இது மொழி பற்றியது மட்டுமல்ல முடிவுகளை வழங்கும் கல்வி முறையைப் பாதுகாப்பது பற்றியது. மாணவர்களுக்கு எது சிறந்தது என்பதில் தமிழ்நாடு சமரசம் செய்யாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### அமைச்சர் அன்பில் மகேஸ்

நேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான், தேசிய கல்விக்கொள்கை மற்றும் பி.எம். ஸ்ரீ திட்டம் தொடர்பான தமிழக அரசின் கடிதத்தை சுட்டிக்காட்டி நாடாளுமன்றத்தில் பேசினார். இதற்கு சமூகவலைதள பதிவில் பதில் அளித்து தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியிருப்பதாவது: தவறான தகவல்களை பரப்புவது உண்மைகளை மாற்றி விடாது. தேசிய கல்வி கொள்கையை தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வருகிறது. ஏனெனில் அது நமது வெற்றிகரமான கல்வி மாடலை குறைத்து மதிப்பிடுகிறது.

தமிழக அரசின் நிலைப்பாட்டில் திடீர் மாற்றம் என எதுவும் இல்லை. கடந்த 15.3.2024 அன்று தமிழக அரசு எழுதிய கடிதம் தேசிய கல்வி கொள்கையை அங்கீகரிப்பதாக இல்லை. மாணவர்களுக்கு நன்மை பயக்கும்போது மட்டுமே தமிழ்நாடு, மத்திய அரசின் திட்டங்களை ஏற்றுக்கொள்கிறது. இதற்காக எந்தவொரு மத்திய அரசின் திட்டத்தையும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்வதாக அர்த்தம் இல்லை.

தேசிய கல்வி கொள்கை தொடர்பாக ஒரு குழு அமைக்கப்படும் என்றும், குழுவின் ஆய்வுகள் மற்றும் பரிந்துரை அடிப்படையில் அதனை செயல்படுத்துவது குறித்து முடிவு செய்வோம் என்றும் அந்த கடிதத்தில் தெளிவாக கூறப்பட்டு உள்ளது. தேசிய கல்வி கொள்கையை திணித்து தமிழ்நாட்டின் கலாசாரம் மற்றும் மரபை சிதைக்க முயற்சிப்பவர்கள் இந்த விவகாரத்தில் அரசியல் செய்கிறார்கள் என தெரிவித்திருந்தார்.

# 2ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை: 50 வயது ஆசிரியர் மீது போக்சோ வழக்கு

**சேலம், மார்ச் 12–**

**2ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் மீது போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட, வெள்ளாளபுரம் ஊராட்சி, புதுகுடியானூர் பகுதியில் செயல்பட்டு வரும் ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 50க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளியில் நாகர்கோவில் பகுதியை சேர்ந்த பிரான்சிஸ் ஆண்டனி (வயது 50) என்பவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் தாரமங்கலம், காட்டு பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள வாடகை வீட்டில் வசித்து வருகிறார்.

இவர் 2ம் வகுப்பு படித்து வரும் 7 வயது மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்து மாணவி தனது பெற்றோரிடம் கூறினாள். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் பள்ளி தலைமை ஆசிரியரிடம் புகார் அளித்தனர்.

அதன்பேரில் கொங்கணாபுரம் வட்டார கல்வி அலுவலர் செந்தில், மாவட்ட குழந்தைகள் நல அலுவலர்கள், போலீசார் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் விசாரணை நடத்தினர். தொடர்ந்து ஆசிரியர் மீது சங்ககிரி அனைத்து மகளிர் போலீசார், போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# வத்தலக்குண்டு அருகே சுங்கச்சாவடியை அடித்து நொறுக்கிய பொதுமக்கள்

வத்தலக்குண்டு, மார்ச் 12–

வத்தலக்குண்டு அருகே புதிதாக திறக்கப்பட்ட சுங்கச்சாவடியை பொதுமக்கள் அடித்து நொறுக்கினார்கள்.

திண்டுக்கல்–குமுளி தேசிய நெடுஞ்சாலையில் வத்தலக்குண்டு பைபாஸ் வழியே சேவுகம்பட்டியில் சுங்கச்சாவடி அமைக்கும் பணி கடந்த பல மாதங்களாக நடைபெற்று வந்தது. இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்து 4 வழிச்சாலையாக மாற்றி சுங்கச்சாவடி திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திண்டுக்கல் மாவட்டத்தில் ஏற்கனவே கொடைரோடு, நத்தம் பகுதியில் சுங்கச்சாவடி செயல்பட்டு வரும் நிலையில் மேலும் ஒரு சுங்கச்சாவடி அமைக்க எதிர்ப்பு தெரிவித்து உள்ளூர் மக்கள் போராட்டமும் நடத்தி வந்தனர். ஆனால் 4 வழிச்சாலைகள் அமைக்காமல் இருவழிச்சாலை மட்டும் முடிந்த நிலையில் சுங்கச்சாவடி இன்று காலை 10 மணிமுதல் செயல்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்காக 7 இடங்களில் பணம் வசூலிப்பதற்கான கவுண்டர்கள் அமைக்கப்பட்டு ஊழியர்களுக்கான அறை மற்றும் கணினிகள் கொண்டு வரப்பட்டன.

ஆனால் சுங்கச்சாவடி திறக்கும் முன்பு காலை 9 மணிக்கு போராட்டம் நடத்தப்போவதாக பொதுமக்கள் அறிவித்தனர். இதனால் நள்ளிரவு 12 மணிக்கே சுங்கச்சாவடி திறக்கப்பட்டு வாகனங்களிடம் கட்டணம் வசூல் செய்யப்பட்டது. அதிகாலையில் இத்தகவல் பரவியதால் பொதுமக்கள் மற்றும் தி.மு.க.வினர் ஒன்று சேர்ந்து சுங்கச்சாவடி நோக்கி வந்தனர். அவர்கள் அங்கிருந்த பெயர் பலகை மற்றும் பணம் வசூலிக்கும் கவுண்டர்களை அடித்து நொறுக்கினர்.

இதனை தடுக்க வந்த சுங்கச்சாவடி ஊழியர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் ஒருசிலருக்கு மண்டை உடைந்தது. படுகாயம் அடைந்த அவர்கள் ஆம்புலன்ஸ் மூலம் வத்தலக்குண்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

**போர்க்களம் போல...**

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் லேப்டாப்களையும் அடித்து நொறுக்கினார்கள். இதனால் அந்த இடமே போர்க்களம் போல் காட்சியளித்தது. இதுகுறித்து பட்டிவீரன்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இன்ஸ்பெக்டர் ராஜசேகரன் தலைமையிலான போலீசார் மற்றும் வருவாய் ஆய்வாளர் பரிமளா, கிராம நிர்வாக அலுவலர் சுமதி ஆகியோரும் அங்கு வந்து பார்வையிட்டனர். சுங்கச்சாவடி ஊழியர்களிடம் தாக்குதல் நடத்திய நபர்கள் குறித்து கேட்டறிந்ததுடன் உள்ளூர் மக்களிடமும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்கள் 4 வழிச்சாலை பணிகளை முழுமையாக நிறைவேற்றாமல் சுங்கச்சாவடியை திறக்க கூடாது.

உள்ளூர் மக்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிப்பதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தனர். இதுகுறித்து அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக போலீசார் உறுதியளித்தனர்.

இதனிடையே தாக்குதலில் ஈடுபட்ட நபர்கள் குறித்து அப்பகுதியில் பொருத்தப்பட்டு இருந்த சி.சி. டி.வி. காமிரா உதவியுடன் போலீசார் ஆய்வு செய்து வருகின்றனர். சுங்கச்சாவடி முற்றிலும் அடித்து நொறுக்கப்பட்டதால் தற்போது வாகனங்கள் வழக்கம்போல் கட்டணமின்றி செல்ல அனுமதிக்கப்பட்டன.

# போரை நிறுத்த உக்ரைன் சம்மதம்; ரஷ்யாவும் ஒப்புக்கொள்ளும்: அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்பிக்கை

கீவ், மார்ச் 12–

ரஷ்யா உடனான போரை 30 நாட்களுக்கு நிறுத்த உக்ரைன் சம்மதம் தெரிவித்துள்ளது. ரஷ்யா அதற்கு ஒப்புக்கொள்ளும் என அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா இடையே கடந்த 3 ஆண்டுகளை கடந்தும் போர் நீடித்து வருகிறது. போருக்கு முற்றுப்புள்ளி வைக்க அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அமெரிக்க வெளியுறவுச் செயலர் மார்கோ ரூபியோ, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ், உக்ரைன் வெளியுறவுத் துறை அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹா மற்றும் அதிபர் அலுவலகத் தலைவர் ஆண்ட்ரி யெர்மக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அமெரிக்க வெளியுறவுச் செயலர் மார்கோ ரூபியோ கூறுகையில், "உக்ரைன் அனைத்துக்கும் தயாராக இருக்கிறது. துப்பாக்கிச் சண்டையை நிறுத்திவிட்டு ஆம்.. இல்லை என்று சொல்லும் நிலையில் தான் உக்ரைன் இருக்கிறது" என்றார்

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ் கூறும்போது, "அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அமைதிக்கான தொலைநோக்குப் பார்வைக்கு ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்தார். அதேவேளையில் மாஸ்கோவுடனான போரில் 30 நாள்களுக்குள் போர்நிறுத்தம் செய்யவும் உக்ரைன் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த நிலையில் இது சம்பந்தமாக அதிபர் டிரம்ப் கூறியதாவது:

சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் நடந்த அமைதிப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு உக்ரைன் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது. இப்போது நாம் ரஷ்யாவுக்குச் செல்ல வேண்டும். ரஷ்யாவும் அதற்கு ஒப்புக்கொள்ளும் என்ற நம்பிக்கை உள்ளது. இந்த கொடூரமான போரில் ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளின் வீரர்களும் கொல்லப்படுகிறார்கள். 30 நாள் இடைக்கால போர் நிறுத்தத்தை ஏற்க உக்ரைன் தயாராக இருக்கிறது. போர் நிறுத்தம் கொண்டு வருவது மிகவும் முக்கியம். ரஷ்யாவை இதைச் செய்ய சொன்னால், அது மிகச் சிறப்பாக இருக்கும். எனவே, இது மிகப் பெரியது என்று நான் நினைக்கிறேன்.

இவ்வாறு டிரம்ப் கூறினார்.

**உறுதி செய்தார் ஜெலன்ஸ்கி**

போர் நிறுத்தத்தை ஏற்க உக்ரைன் தயாராக உள்ளது என டிரம்ப் கூறியதை உறுதி செய்யும் வகையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த வீடியோவில் ஜெலன்ஸ்கி கூறியதாவது:–

அமெரிக்க தரப்பு எங்கள் வாதங்களை புரிந்து கொண்டது. எங்கள் கோரிக்கைகளை ஏற்று கொண்டது. எங்கள் குழுவினர், அமெரிக்கா குழுவிடம் போர் நிறுத்தம் தொடர்பாக சவுதி அரேபியாவில் ஆலோசனை நடத்தியது. இந்த ஆக்கப்பூர்வமான விவாதத்திற்காக அதிபர் டிரம்பிற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

ரஷ்யா ஒப்புக்கொண்டால் இந்த தருணத்தில் இருந்தே அமைதி ஏற்படும். இன்றைய விவாதங்களில், முக்கியமாக உக்ரைனுக்கு பாதுகாப்பு உதவி மற்றும் ராணுவ உதவிகள் நிறுத்தத்தை வாபஸ் பெற அமெரிக்கா ஒத்துக்கொண்டது.

நாங்கள் அமைதியை விரும்புகிறோம். உக்ரைனுக்கு உதவும் அனைவருக்கும் நான் நன்றி கூறுகிறேன். போர் நிறுத்தத்திற்கு தயாராக இருக்கிறதா என்பதை தெளிவுப்படுத்த வேண்டும். இதற்கு சரியான நேரம் வந்துவிட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

# காஞ்சிபுரம் அருகே ரவுடி வசூல்ராஜா கொலையில் கல்லூரி மாணவர்கள் உள்பட 5 பேர் கைது

**காஞ்சிபுரம், மார்ச் 12–**

**ரவுடி வசூல்ராஜா கொலையில் கல்லூரி மாணவர்கள் உள்பட 5 பேரை போலீசார் கைது செய்தனர்.**



காஞ்சிபுரம் மாவட்டம், திருகாளிமேடு பகுதியை சேர்ந்தவர் ராஜா என்கிற வசூல் ராஜா. இவர் மீது பல காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. காவல் துறையின் அறிவுரையின் பேரில் வசூல் ராஜா சமீப நாட்களாக எந்த குற்ற சம்பவங்களிலும் ஈடுபடாமல் டிராவல்ஸ் தொழில் செய்து வந்ததாக கூறப்படுகிறது. நேற்று காலை திருகாளிமேடு சிவன் கோயில் எதிரே உள்ள ரேஷன் கடை வாசலில் வசூல் ராஜா நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் வசூல் ராஜா மீது திடீரென நாட்டு வெடிகுண்டு வீசினார். அது வசூல் ராஜாவின் மார்பு பகுதியில் விழுந்து வெடித்துள்ளது. இதனால் வசூல் ராஜாவுக்கு மார்பு பகுதி முழுவதும் சிதைந்து அவர் சம்பவ இடத்திலேயே நிலைகுலைந்து உயிரிழந்தார்.

**5 பேர் கைது**

இதுகுறித்து காவல்துறைக்கு தகவல் அளித்தனர். அதனை அடுத்து சம்பவ இடத்துக்கு காஞ்சிபுரம் தாலுகா காவல்துறையினர் விரைந்து வந்து சடலத்தை ஆய்வு செய்து பின்னர் பிரேத பரிசோதனைக்காக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கொலை திட்டத்தை அரங்கேற்றிய பின்னர் கொலையாளிகள் அங்குள்ள தெருக்கள் வழியாக தப்பி செல்லும் வீடியோ காட்சி பதிவாகி இருந்தது. இதனை கைப்பற்றி போலீசார் தீவிர விசாரணை நடத்தினர். கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து ரவுடி வசூல்ராஜா கொலை தொடர்பாக அதே பகுதியை சேர்ந்த 3 கல்லூரி மாணவர்கள் உள்பட 5 பேரை போலீசார் பிடித்து உள்ளனர்.

அவர்களிடம் கொலைக்கான காரணம் என்ன? என்பது குறித்து ரகசிய இடத்தில் வைத்து தீவிர விசாரணை நடத்தினர். விசாரணையில், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு ரவுடி வசூல்ராஜா 2 கல்லூரி மாணவர்களை தாக்கியதாக கூறப்படுகிறது. மேலும் பெண் தொடர்பாகவும் அவர் பிரச்சனையில் ஈடுபட்டு உள்ளார். இந்த தகராறில் கொலை செய்ததாக பிடிபட்டவர்கள் கூறியதாக தெரிகிறது. ஆனால் கல்லூரி மாணவர்களுக்கு வெடிகுண்டு எப்படி கிடைத்தது? என்பது போலீசாருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது. எனவே அவர்களுக்கு பின்னால் ரவுடி கும்பல் இருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணையை தீவிரப்படுத்தி உள்ளனர்.

காஞ்சிபுரத்தை சேர்ந்த பிரபல ரவுடி ஸ்ரீதரின் மறைவுக்கு பின்னர் அவரது இடத்தை பிடிக்க ரவுடிகளிடையே தொடர்ந்து மோதல் மற்றும் கொலைகள் அரங்கேறி வந்தன. எனவே ரவுடிகளுக்கு இடையே ஏற்பட்ட தகராறு அல்லது வசூல் ராஜாவால் தீர்த்து கட்டப்பட்டவர்களின் கூட்டாளிகள் திட்டமிட்டு இதில் ஈடுபட்டு இருக்கலாம் என்றும் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். பிடிபட்டவர்களிடம் முழுமையாக விசாரணை முடிந்த பின்னரே வசூல்ராஜாவின் கொலைக்கான காரணம் என்ன? என்பது தெரியவரும் என்று போலீசார் தெரிவித்து உள்ளனர்.

# ஏழைக் குடும்பத் தலைவிகளுக்கு இனி ரூ.2500...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

திரைப்படம், ஆவணப்படம் ஆகியத்துறைகளுக்கும் கலைமாமணி விருது வரும் நிதியாண்டு முதல் தரப்படும். காரைக்கால் அம்மையார் பெயரில் விருது வழங்க உத்தேசித்துள்ளோம்.

★ பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு பணிகள் நடக்கவுள்ளது. வரும் நிதியாண்டு முதல் ரேஷன் அட்டைத்தாரர்களுக்கு இலவச அரிசியோடு 2 கிலோ கோதுமை இலவசமாக தரப்படும்.

**பாண்லேயில் ஐஸ்கிரீம்**

★ பாண்லேயில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் பிரிவு நிறுவப்படவுள்ளது.

★ மதிய உணவுத்திட்டத்தில் வாரம் 3 நாட்களுக்கு தரப்படும் முட்டை, வரும் கல்வியாண்டு முதல் அனைத்து பள்ளி நாட்களிலும் தரப்படும்.

★ பெருந்தலைவர் காமராஜர் நிதி உதவித் திட்டத்தின் கீழ், 'சென்டாக்' மூலம் தேர்வாகும் மருத்துவம், பொறியியல், செவிலியர் பாடப்பிரிவுகளில் சேர்வோருக்கு நிதி உதவி தரப்படுகிறது. வரும் கல்வியாண்டு முதல் அரசு ஒதுக்கீட்டில் சென்டாக் மூலம் சேர்க்கை பெறும் அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நிதியுதவி விரிவுப்படுத்தப்படும்.

**100% கட்டண விலக்கு**

★ அரசு பள்ளியில் படித்து நீட் பாடப்பிரிவுகளில் 10 சதவீத இடஒதுக்கீட்டில் சேரும் அனைவருக்கும் 100 சதவீதம் கட்டண விலக்கு தரப்படும். அரசு பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து, கல்லூரிகளில் இளநிலை படிக்கும் அனைவருக்கும் மாதம் ரூ.1,000 வீதம் மூன்று ஆண்டுகளுக்கு ஊக்குவிப்புத் தொகை இந்தக் கல்வியாண்டு முதல் தரப்படும்.

★ காரைக்காலில் செயற்கை தடகளப்பாதை அமைக்கப்படும்.

**ஒரு கால பூஜைக்கு இனி ரூ.30,000**

★ திருக்கோயில்களில் ஒருகால பூஜைக்காக தற்போது தரப்படும் நிதியுதவித்தொகை ரூ.20,000லிருந்து ரூ.30,000 உயர்த்தி தரப்படும்.

கிழக்கு கடற்கரைச்சாலையில் அமையவுள்ள புதிய பஸ் நிலையத்துக்கு அடல் பிஹாரி வாஜ்பாய் பேருந்து நிலையம் என பெயர் சூட்டப்படும். இதற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ சிறைக் கைதிகளின் தகவல்கள் டிஜிட்டல் முறையில் பராமரிக்கப்படும். ஏழை சிறைக் கைதிகள் நலத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு தேவையான சட்ட உதவி, திறன் மேம்பாட்டு திட்டம் தரப்படும்.

**100 ஏக்கரில் சுற்றுலா மண்டலம்**

★ புதுச்சேரியில் அனைத்து பகுதிகளிலும் மறு நிலஅளவை ட்ரோன் சர்வே நடத்தப்படும். மணப்பட்டு கிராமத்தில் 100 ஏக்கரில் சுற்றுலா மண்டலம் அமைத்து அரசு தனியார் பங்களிப்புடன் தீம் பூங்காக்கள், ஓய்வு விடுதிகள், மாநாட்டு கூடங்கள் அமையும்.

★ விமான நிலையத்தின் ஓடுதளத்தை விரிவாக்க நிலம் கையகப்படுத்த முதல்கட்டமாக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ மின் வாகனங்களுக்கு சாலை வரியில் 50 சதவீதம் சலுகை தரப்படும். ஆதிதிராவிட பழங்குடியின மக்களுக்கு சிறப்புக்கூறு திட்டநிதி ரூ. 526.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30 வயதை கடந்தும் திருமணம் ஆகாத, கணவரை இழந்த, வேலையற்ற ஆதிதிராவிட பழங்குடியின பெண்களுக்கு மாதம் ரூ. 3,000 அவர்களுக்கு திருமணமாகும் வரை மற்றும் பணிக்குச்செல்லும் வர தரப்படும்.

★ ஆதிதிராவிட, பழங்குடியின முதியோர், விதவை, முதிர்கன்னி, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கு தற்போது தரப்படும் ஓய்வூதியத்துடன் ரூ.500 கூடுதலாக தரப்படும். பெற்றோரை இழந்த ஆதிதிராவிட பழங்குடியின குழந்தைகளுக்கு 18 வயது வரை கல்வி, அடிப்படை தேவைகளுக்கு மாதம் ரூ. 5 ஆயிரம் தரப்படும்.

**மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8,000 நிதி உதவி**

★ இளங்கலை பட்டப்படிப்பு படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தற்போது தரப்படும் ரூ.5,000 இனி ரூ.8,000 உயர்த்தி வழங்கப்படும். முதுகலை படிப்போருக்கு தரப்படும் ஆண்டுக்கு ரூ.6,800 தொகை ரூ.9,800 ஆக உயர்தத்ப்படும்.

★ புதுச்சேரியில் 21 முதல் 55 வயது வரை அரசின் எவ்வித மாதாந்திர உதவித்தொகை பெறாத ஏழை குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. இந்த நிதியாண்டு முதல் இந்த உதவித்தொகையை ரூ.2500 ஆக உயர்த்தி தரப்படும்.

★ அரசு மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மூலம் ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் தலா ரூ.500 உயர்த்தி தரப்படும்.

★ வருவாய்த் துறை, உள்துறை, கல்வித்துறை, வேளாண்துறை, சுகாதாரத்துறை, மின்துறை கலை பண்பாட்டுத் துறை ஆகியவற்றில் 229 பணியிடங்கள் நடப்பு நிதியாண்டில் நிரப்பப்படும்.

இவ்வாறு பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சென்னை போலீசாருக்கு பஸ் பயண அடையாள அட்டை: கமிஷனர் அருண் வழங்கினார்

சென்னை, மார்ச்.12–

சென்னை போலீசாருக்கு பஸ் பயண அடையாள அட்டையை கமிஷனர் அருண் வழங்கினார்.



பணி நிமித்தமாக போலீசார் பஸ்களில் டிக்கெட் எடுக்காமல் அவர்களது அடையாள அட்டைகளை காண்பித்து பயணிப்பதை வழக்கமாக வைத்திருந்தனர். ஆனால், சில பஸ் கண்டக்டர்கள் இதற்கு அனுமதிக்காமல் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால், போலீசாருக்கும், பஸ் ஊழியர்களுக்கும் இடையே ஆங்காங்கே மோதல் சம்பவங்கள் நடந்தன.

இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும்வகையில் போலீசார் அவர்கள் பணியாற்றும் மாவட்டத்துக்குள் பஸ்களில் பயணிக்கும் விதமாக போலீஸ்காரர் முதல் இன்ஸ்பெக்டர் வரை நவீன அடையாள அட்டைகள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருந்தார்.

இதைத்தொடர்ந்து சென்னை நகரில் முதற்கட்டமாக 11 ஆயிரத்து 21 பேருக்கு பஸ் பயண அடையாள அட்டை வழங்கும் பணி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் நடந்தது. விழாவுக்கு சென்னை மாநகர போக்குவரத்துக்கழக மேலாண்மை இயக்குனர் பிரபுசங்கர் முன்னிலை வகித்தார். போலீஸ் கமிஷனர் அருண் தலைமை தாங்கி அடையாள அட்டைகளை போலீசாருக்கு வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சென்னை காவல்துறை கூடுதல் கமிஷனர் (தலைமையிடம்) கபில் குமார் சி சரட்கர், துணை கமிஷனர்கள் ஜி.சுப்புலட்சுமி (நிர்வாகம்), மேகலீனா ஐடன் (காவலர் நலன் மற்றும் எஸ்டேட்), போக்குவரத்துக் கழக பொது மேலாளர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழகம் முழுவதும் 66 ஆயிரத்து 176 போலீசாருக்கு பஸ் பயண அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாகவும், தமிழக போலீஸ்துறையில் பல்வேறு பிரிவுகளில் பணியாற்றுபவர்களுக்கு இதன் மூலம் பலன் கிடைத்துள்ளது என்றும், ஒரு அடையாள அட்டைக்கு தலா ரூ.800 வீதம் மாதந்தோறும் பஸ் போக்குவரத்து கழகத்துக்கு வழங்கப்படும் என்றும், இதற்கான பணத்தை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்றும், இந்த சிறப்பு திட்டத்தை கொண்டு வந்த முதல்அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

## மருத்துவமனையில் இருந்து ஜக்தீப் தன்கர் டிஸ்சார்ஜ்

புதுடெல்லி, மார்ச் 12–

டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்த துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் (73) இன்று காலை வீடு திரும்பி உள்ளார்.

திடீர் நெஞ்சு வலி காரணமாக கடந்த 9ம் தேதி நள்ளிரவு டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் ஜகதீப் தன்கர் அனுமதிக்கப்பட்டார். உடனடியாக தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு தேவையான சிகிச்சையை மருத்துவக் குழுவினர் அளித்தனர்.

இந்த நிலையில், ஜகதீப் தன்கருக்கு தேவையான சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் அவர் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளதால் அவர் இன்று காலை டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார் என்றும் எய்ம்ஸ் மருத்துவக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், அடுத்த சில நாள்கள் ஜகதீப் தன்கர் ஓய்வில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடலூர் தேவனாம்பட்டினம் வெள்ளி கடற்கரையில் நடைபெற்ற மாசி மக திருவிழாவையொட்டி கடலூர் பாடலி சிட்டி அரிமா சங்கத்தின் சார்பில் தலைவர் பார்த்தசாரதி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி சிறப்பித்தார். மாவட்ட தலைவர் மோகன், துணைத்தலைவர் முருகன், துணை செயலாளர் ராதாகிருஷ்ணன், மற்றும் நிர்வாகிகள் பாடலீஸ்வரன், செல் ஆறுமுகம், சரன்ராஜன், ராஜேஷ் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# ஆன் லைன் விளையாட்டுக்கு ஆதார் கட்டாயம்; மத்திய – மாநில அரசுகள் பதிலளிக்க ஐகோர்ட் அவகாசம்

சென்னை, மார்ச் 12–

ஆன் லைன் விளையாட்டுகளுக்கு ஆதார் இணைப்பை கட்டாயமாக்கி, நேரக்கட்டுப்பாடு விதித்து பிறப்பிக்கப்பட்ட விதிமுறைகளை எதிர்த்த வழக்குகளில், மத்திய – மாநில அரசுகள் பதிலளிக்க 21–ந் தேதி வரை அவகாசம் வழங்கி சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் ஆன்லைன் விளையாட்டுக்களை முறைப்படுத்த, கடந்த 2022ம் ஆண்டு தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன் லைன் விளையாட்டுக்கள் ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த சென்னை ஐகோர்ட், அதிர்ஷ்டத்துக்கான ஆன் லைன் விளையாட்டுக்களை தடை செய்தது செல்லும் என தீர்ப்பளித்தது. அதேசமயம், திறமைக்கான ஆன் லைன் விளையாட்டுக்களான ரம்மி, போக்கர் விளையாட்டுக்களை தடை செய்த பிரிவுகளை ரத்து செய்து தீர்ப்பளித்த ஐகோர்ட், ஆன் லைன் ரம்மி உள்ளிட்ட விளையாட்டுக்களை விளையாடுவதற்கான வயது, நேரம் உள்ளிட்டவை தொடர்பாக அரசு விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம் என 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் தீர்ப்பளித்திருந்தது.

இந்நிலையில், இந்த சட்டத்தின் கீழ் ஆன் லைன் விளையாட்டுக்களை ஒழுங்குபடுத்த விதிமுறைகளை வகுத்து பிப்ரவரி 14ம் தேதி அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டது. அதில், ஆன்லைன் விளையாட்டுக்களை விளையாட ஆதார் இணைப்பு கட்டாயமாக்கியதையும், நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 5 மணி வரை விளையாட்டுக்கு யாரையும் அனுமதிக்க கூடாது என நேர கட்டுப்பாடு விதித்ததையும் எதிர்த்து ப்ளே கேம்ஸ் 24★7 பிரைவேட் லிமிட்டெட், ஹெட் டிஜிட்டல் வொர்க்ஸ், எஸ்போர்ட் ப்ளேயர்ஸ் நலச்சங்கம் உள்ளிட்டோர் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், மத்திய மாநில அரசுகள் பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்குகள் நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம் மற்றும் கே.ராஜசேகர் அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தன. அப்போது மத்திய மாநில அரசுகள் தரப்பில் பதில்மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், மார்ச் 21–ந் தேதிக்குள் பதில்மனு தாக்கல் செய்ய வேண்டும் என அவகாசம் வழங்கி, விசாரணையை அன்றைய தினத்துக்கு தள்ளிவைத்தனர். 17–ந் தேதி முதல் விசாரணை துவங்கப்படும் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

**இந்தியன் ஓவர்சீஸ் வங்கி**
கீழ்ப்பாக்கம் கிளை: எண்.477, கீழ்ப்பாக்கம் கார்டன் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை-600010
Ph: 044-2646 1141 / 0178 E-mail- iob0571@iob.in
**பொது அறிவிப்பு** Sale Under SARFAESI Act
23.02.2025 தேதியிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி நாளிதழ்களில் வெளியான எங்களது அசையா சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு விளம்பரத்தை பார்க்கவும். (A/c. M/s. க்ரீஃப்பின்ஸ் டெக்னாலஜிஸ்) 12.03.2025 அன்று நடத்தப்படவிருக்கும் சொத்தின் ஏல விற்பனை, DRT-III, சென்னை-600 006-ன் உத்தரவின் படி நிறுத்தி வைக்கப்படுகிறது. மறு விற்பனை தேதி பின்னர் அறிவிக்கப்படும்.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

**பெயர் மாற்றம்**
ZAHRA, பிறந்த தேதி: 10/07/2007, நெ.28, மூக்கர் நல்லமுத்து தெரு, சென்னை –600001. என்ற முகவரியில் வசிக்கும் எனது மகள் இனி **ZAHRA YUSUF HAJEE** என்று அழைக்கப்படுகிறார்.
Yusuf. N. Hajee,
தந்தை

**பெயர் மாற்றம்**
DHANESH KUMAR TEEKAM CHAND, தந்தை பெயர்: Teekam Chand, பிறந்த தேதி: 02.11.1972, நெ.92/93, காருனீகர் தெரு ஆதம்பாக்கம், சென்னை, பின்கோடு –600 088. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **DHANESH KUMAR JAIN. TEEKAM CHAND,** என்று அழைக்கப்படுகிறேன்.
DHANESH KUMAR TEEKAM CHAND

Karur Vysya Bank
திருவள்ளூர் கிளை: எண்.170, J.N.ரோடு, ஆயில் மில், M.S.K காம்ப்ளக்ஸ், திருவள்ளூர் - 602001.
**தங்க நகைகள் ஏல அறிவிப்பு**
எங்கள் வங்கியில் கடன் பெற்றுள்ள கீழ்க்கண்ட நபர்கள், தவணை கடந்து நெடு நாட்கள் ஆகியும் கடன் தொகையை செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. நோட்டீஸ் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியும் நகைகளை மீட்கவில்லை. எனவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல் வட்டியுடன் இதர செலவுகளையும் சேர்த்து வருகிற 20.03.2025 அன்று மதியம் 3.00 மணிக்குள் வங்கியில் செலுத்தி நகைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறினால் கடனுக்கு ஈடாக வைக்கப்பட்டுள்ள நகைகளை கடன் பெற்றவர்களின் செலவிலேயே 20.03.2025 அன்று மாலை 4.00 மணியளவில் எங்கள் வங்கி அலுவலகத்தில் வைத்து கிளை மேலாளர் அவர்களால் பொதுமக்கள் முன்னிலையில் பகிரங்க ஏலம் விடப்படும் அல்லது நிர்வாகத்தின் சௌகரியம் போல் மறு ஏல அறிவிப்பு ஏதுமின்றி வேறு தேதியில் ஏலம் விடப்படும் என்று இதன் வாயிலாக அறிவிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கைகளை மாற்றவோ, ஒத்திப் போடவோ கிளை மேலாளருக்கு முழு அதிகாரம் உண்டு என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். வாடிக்கையாளர்கள் இறந்து போய் இருப்பாரானால் ஏலம் சம்பந்தப்பட்ட விதிமுறை நிபந்தனைகள் யாவும் அந்த வாடிக்கையாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் பொருந்தும். ஏல நிபந்தனைகளை வங்கியின் அறிவிப்பு பலகையில் காணலாம்.

| நகைக்கடன் கணக்கு எண் | கடன் பெற்றவர் பெயர் & முகவரி | நகை எடை (கிராமில்) |
|---|---|---|
| 1672951000018439 | ராஜா.K, மனை எண்.30, ஜட்ஜஸ் காலனி, 1வது தெரு, பெரியகுப்பம், திருவள்ளூர்-602001 | 16 |

தேதி: 12.03.2025; இடம்: திருவள்ளூர் கிளை மேலாளர், கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்

## விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிக்க

# தமிழக அரசு அமைத்த தேடல் குழு செல்லாது: கவர்னர் ஆர்.என்.ரவி அறிவிப்பு

சென்னை, மார்ச்.12

விளையாட்டு பல்கலைக்கழக துணைவேந்தரை நியமிக்க தமிழக அரசு அமைத்த தேடல் குழு செல்லாது என்று கவர்னர் ஆர்.என். ரவி அறிவித்துள்ளார்.

தமிழக கவர்னர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு மாநில பல்கலைக்கழகங்களின் வேந்தராக உள்ள கவர்னர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் (சென்னை) துணைவேந்தரை அடையாளம் காணுவதற்கான தேடல் குழுவை அமைத்து உள்ளார். இந்த குழுவில், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக சட்டத்தின் விதிகள் மற்றும் 2018ம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் (யுசிஜி) நடைமுறை விதிமுறைகளின்படி கவர்னரின் பிரதிநிதிகள், தமிழ்நாடு அரசு, பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் மற்றும் பல்கலைக்கழக மானியக்குழு தலைவரின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவர். அதில் பல்கலைக்கழக மானியக்குழு தலைவரின் பிரதிநிதியை சேர்க்க வேண்டும் என்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி கட்டாயமாகும்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் விஜயன், மத்திய மாவட்ட செயலாளர் சுபாஷ், வடசென்னை மாவட்ட நாடார் பேரவை தலைவர் சீனிவாசன், திருவள்ளூர் மாவட்ட தலைவர் சுரேஷ், ஆர்.கே. நகர் பகுதி செயலாளர் ராஜேஷ், திருவொற்றியூர் பகுதி செயலாளர் முத்துக்குமார், மணலி பகுதி செயலாளர் பாலசுப்பிரமணியம், சௌரா சுரேஷ், மாதவரம் பகுதி பெருமாள், கொளத்தூர் பகுதி பிரகாஷ், மாதவரம் பகுதிச் செயலாளர் பஞ்சவர்ணம்,

வடசென்னை மாவட்ட செயலாளர் சாமுவேல், பொருளாளர் சுடலைமணி, ராயபுரம் பகுதி செயலாளர் சங்கர பாண்டியன், செங்குன்றம் மோகன்ராஜ், மணலி டேனிஷ் குமார், ராயபுரம் பகுதி சாபுதீன், சண்முகசுந்தரம், நடராஜன், மாசிலாமணி, எர்ணாவூர் அன்பரசன், ஸ்டாலின், முருகேசன், சண்முகம், கிருஷ்ணசந்திரன், மகளிர் அணி நிர்வாகிகள் கல்பனா, ஆனந்தி, குணசுந்தரி, மீனா, விஜயலட்சுமி, ராஜபுஷ்பம், மல்லிகா, தமிழ்ச்செல்வி, விஜயா, சிவ சாந்தி, அம்மு, அமராவதி, தனம்மாள், நாகலட்சுமி மற்றும் ஏராளமான நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# கரூர் வைஸ்யா வங்கிக்கு ஒரே நாளில் 3 புதிய கிளைகள் திறப்பு

சென்னை, மார்ச் 12–

கரூர் வைஸ்யா வங்கி 3 புதிய கிளைகளைத் துவக்கியுள்ளது. தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் தொடங்கப்பட்ட இப்புதிய கிளைகள் வைப்புத்தொகைகள், சேமிப்பு மற்றும் நடப்பு கணக்குகள், கடன் பெறும் வசதி போன்ற விரிவான வங்கி சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும்.

நடப்பு நிதியாண்டில் (2024–25) இந்த வங்கி 38 புதிய கிளைகளைச் திறந்துள்ளது. மேலும் வங்கியின் மொத்த கிளைகளின் எண்ணிக்கை 880 ஆக உயர்ந்துள்ளது.

இதன் ஆந்திரப் பிரதேசத்தில் ஓங்கோல் கிளையை கொடுரு வெங்கடேஸ்வர ராவ் (கமிஷனர், ஓங்கோல் நகராட்சி) திறந்து வைத்தார்.

879வது கிளையை பெங்களூருவில் சிவகுமார் (தலைவர், பீன்யா தொழிற்சாலைகள் சங்கம்) திறந்து வைத்தார். 880வது கிளையை பாகாயத்தில் அனிதா (இணை ஆணையர் வேலூர் இந்து அறநிலையத்துறை) திறந்தார்.



இக்கிளைகள் அனைத்து அடிப்படை வங்கி பரிவர்த்தனைகளையும், வாடிக்கையாளர்களின் வங்கி தொடர்பான தேவைகளையும் பூர்த்தி செய்யும். மேலும் சில்லறை, நிறுவன மற்றும் நுகர்வோர் கடன்களை உள்ளடக்கிய முழுமையானவங்கி, நிதி சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும்.

இணையதளம் மற்றும் மொபைல் மூலமாகவும், இந்த வங்கி பல்வேறு சேவைகளை வழங்குகிறது. KVB DLite என்ற மொபைல் பேங்கிங் செயலியின் மூலம் 150க்கும் அதிகமான நிதி மற்றும் நிதி அல்லாத சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இந்த செயலி வாடிக்கையாளர்களுக்கு மேலும் உதவும் வகையில் சமீபத்தில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

# ஒரிஜினல் பத்திரம் தொலைந்தாலும் பதிவு செய்ய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தலைவர் ஆ.ஹென்றி வலியுறுத்தல்

சென்னை, மார்ச். 12–

அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் நிறுவனரும், தேசியத் தலைவருமான ஆ.ஹென்றி, பதிவு அலுவலகங்களில் பொதுமக்கள் ஆவணங்களை பதிவுக்கு தாக்கல் செய்யும்போது அதற்கு உண்டான முந்தைய அசல் ஆவணத்தை பதிவாளரின் பார்வைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்கிற 55A சட்டப்பிரிவு சம்பந்தமான உத்தரவில் உள்ள முரண்பாடுகளை களைய வேண்டும் என தமிழ்நாடு பதிவுத்துறை தலைவருக்கு, மக்களின் நலன் கருதி கடிதம் எழுதியுள்ளார்.

அசல் ஆவணங்களை தவறவிட்ட பொதுமக்கள் பல உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பொதுமக்களிடம் உள்ள தனிநபர் சம்பந்தமான அசல் ஆவணங்கள் இல்லையென்றாலும், பதிவுத்துறையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிற பொது ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு செய்து வாங்குபவர் மற்றும் விற்பவர் மற்றும் சாட்சிகளை உறுதி செய்து பதிவு செய்ய வேண்டும் என உத்தரவுகள் பல பிறப்பிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து பதிவுத்துறை சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு தாக்கல் செய்தது. இந்த வழக்கினை விசாரித்த உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றத்தின் உத்தரவினை உறுதி செய்து அசல் ஆவணங்கள் பொதுமக்களிடம் இல்லை என்றாலும் பதிவுத்துறையினால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பொது ஆவணத்தின் அடிப்படையில் பதிவு செய்ய வேண்டும் என உறுதி செய்ததின் அடிப்படையில் பதிவுத்துறையின் கூடுதல் துணைத் தலைவரின் கடித எண் 44420/2025 இன் மூலம் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவினை கடைபிடிக்கக் கோரி அறிவுறுத்தி அனைத்து மண்டல பதிவுத்துறை தலைவர்கள், மாவட்ட பதிவாளர்கள் நிர்வாகம் மற்றும் தணிக்கை சார்பதிவாளர்களுக்கும் கடிதம் அனுப்பி இருந்தார்.

பதிவுத்துறை தலைவரால் அசல் ஆவணத்தை ஒளி வருடல் செய்வது சம்பந்தமாக ஒரு வழிகாட்டி நெறிமுறை சுற்றறிக்கை எண்: 2492 l CA1 / 2024 நாள்:25.01.2025 என்கிற அடிப்படையில் வெளியிட்டிருப்பது மேலும் சார்பதிவாளர்களுக்கு அசல் ஆவணங்கள் இன்றி பதிவு செய்வது குறித்த விஷயத்தில் ஏற்கனவே தெளிவான புரிதல் இல்லாத சூழலில் குழப்பத்தில் இருந்து வந்த சார் பதிவாளர்களுக்கு, பதிவுத்துறை கூடுதல் துணைத் தலைவரின் கடித எண்:44420/C1/2024 மேலும் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அமைந்துள்ளது.



இதன் மூலம் பதிவுத் துறைக்கு வரும் வருவாயும் பெருமளவில் தடுக்கப்படுகிறது.

ஆகவே தமிழ்நாடு பதிவுத்துறை தலைவர், பொதுமக்களின் நலனை தங்களின் கூடுதல் கவனத்தில் கொண்டு, பதிவுத் துறையில் பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கிற பொது ஆவணங்களின் அடிப்படையிலும், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையிலும், அசல் ஆவணங்கள் இல்லையென்றாலும், பதிவுத் துறையில் பாதுகாத்து வைக்கப்பட்டு இருக்கிற பொது ஆவணங்களை சரிபார்த்து பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுந்த வழிகாட்டி நெறிமுறைகளுடன் சுற்றறிக்கையினை வெளியிட்டு உதவிட வேண்டும்.

இவ்வாறு அவர் கடிதம் எழுதியுள்ளார்.



# ஜெயப்பிரியா வித்யாலயா பள்ளியில் பல்துறை நுண்ணறிவுத் திருவிழா

விருத்தாச்சலம், மார்ச் 12–

விருத்தாச்சலம் கோபாலபுரம் ஜெயப்பிரியா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பல்துறை நுண்ணறிவு திருவிழா கொண்டாடப்பட்டது.

இதில் எல்கேஜி மழலையர்கள் முதல் எட்டாம் வகுப்பு மாணவர்கள் வரை அனைவரும் கலந்து கொண்டு தமிழ், ஆங்கிலம், அறிவியல், கணிதம், சமூக அறிவியல், கணினி அறிவியல் மற்றும் தனித் திறன் பயிற்சிகளான சிலம்பம், கராத்தே, இசை, நடனம், யோகா உள்ளிட்ட பிரிவுகளிலும் தங்களது தனி திறமைகளை வெளிப்படுத்தினர். பெற்றோர்கள் மற்றும் விருதாச்சலம் பகுதி பொதுமக்களும் கலந்து கொண்டு மாணவர்களின் தனித் திறள்களைக் கண்டு வெகுவாக பாராட்டினர்.

நிகழ்வினை ஜெயப்பிரியா வித்யாலயா கல்விக்குழுமத்தின் நிறுவனத் தலைவர் சி. ஆர்.ஜெயசங்கர் தலைமை ஏற்று துவக்கி வைத்தார். இயக்குநர் என்.எஸ்.தினேஷ் முன்னிலை வகித்தார். பள்ளியின் முதல்வர் சுதர்சனா அனைவரையும் வரவேற்று பேசினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# கல்வித் துறையில் 'ரோபோ' செயல்பாடு: மைபோட் நிறுவனம் அறிமுகம்

சென்னை, மார்ச். 12– கல்வித்துறையில் ரோபாடிக்ஸ் மூலமாக ஒரு புதிய புரட்சியை மைபோட் வென்ச்சர்ஸ் நிறுவனம் உருவாக்கியிருக்கிறது.

இது குறித்து அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாகி விவேக் திலிப் கூறியதாவது:–

"ரோபாட்டிக்ஸ் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் கல்விக்கும் தொழில்துறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் பணியில் மைபோட் வென்ச்சர்ஸ் ஈடுபட்டுள்ளது.

இந்நிறுவனம் இந்தியாவிலிருந்து உலகிற்கு சிறந்த ரோபாட்டிக்ஸ் தீர்வுகளை வழங்குகிறது. இந்த நிறுவனம் பாடப் புத்தகங்களுக்கு அப்பால் சென்று, வகுப்பறைகளை புதுமை மையங்களாக மற்றும் ரோபாட்டிக்ஸ் திட்டங்கள் மற்றும் தயாரிப்புகளை வழங்குகிறது.

ஒரு மழலையர் பள்ளி மாணவர் தனது முதல் ரோபோவை பொருத்தும் பணி இருந்தாலும் சரி அல்லது ஒரு உயர்நிலைப்பள்ளி மாணவர் நவீன செயற்கை செயல்படுகளில் இயங்கும் ரோபோவை புரோகிராமிங் செய்வதாக இருந்தாலும் சரி, இந்தியாவில் முதல் முறையாக, 43 கல்வி தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒருங்கிணைப்பான




விருது பெற்ற ஃபின்னிஷ் நிறுவனத்தால் சரிபார்க்கப்பட்ட பாடத்திட்டம் உள்ளது.

கல்வி துறையில் மட்டுமின்றி, இந்த நிறுவனம் தொழில்நுட்பத்தை தங்கள் செயல்முறைகளை துரிதப்படுத்தி, ஆட்டோமேஷன் மற்றும் புதுமையை மேம்படுத்த உதவுகிறது. மேலும், குழந்தைகளின் சிந்தனை திறனை மேம்படுத்தும் வகையில், சாஃப்வேர் மற்றும் ஹார்டுவேரும் இந்த வகுப்புகளின் மூலம் வழங்கப்படுகிறது.

இதுவரை தயாரிக்கப்பட்ட ரோபோகளுடன் போட்டியிடும் வகையில் மைபோட் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் ஒரு புதிய தொடக்கத்தை உருவாக்கி, உலகம் முழுவதும் மாணவர்களின் மற்றும் தொழில்துறைகளுக்கான பொறியியல் மற்றும் தொழில்நுட்ப முனைவோராக உருவாகியிருக்கிறது".

இவ்வாறு அவர் கூறினார்.

இணை நிறுவனர் கலைக்கோவன் அந்தோணி, நிதி ஆலோசகர் லக்ஷ்மண் குமார் நாசர்புரி ஆகியோரும் உடன் இருந்தனர்.

# சிதம்பரம் வீனஸ் குழுமப் பள்ளிகளில் பெண்கள் நலன் குறித்த கருத்தரங்கம்

சிதம்பரம், மார்ச் 12– வீனஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கடந்த 8–ந் தேதி சர்வதேச மகளிர் தினவிழா கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு பள்ளியின் தாளாளர் குமார் தலைமை தாங்கினார். வீனஸ் கல்விக் குழுமங்களின் இணைத் தாளாளர் ரூபியால் ராணி முன்னிலை வகித்து சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து பரிசுகள் வழங்கினார்.

பள்ளியின் நிர்வாக அலுவலர் ரூபி கிரேஸ் போனிகலா வரவேற்புரையாற்றினர். பள்ளியின் முதல்வர் நரேந்திரன் விழாவிற்கு வந்திருந்த விருந்தினர்களைப் பற்றியும் அவர்களது சமூக சேவைகளைப் பற்றியும் பேசினார்.

இவ்விழாவில் சிதம்பரம் அருள் நர்சிங் மருத்துவமனை டாக்டர். பத்மினி கபாலிமூர்த்தி மகப்பேறு சிறப்பு மருத்துவர், டாக்டர். பிருந்தா அருள்மொழிச் செல்வன் மகப்பேறு




சிறப்பு மருத்துவர், டாக்டர். பவித்ரா பாலகிருஷ்ணன் மகப்பேறு சிறப்பு மருத்துவர் மற்றும் டாக்டர். மாளவா சரஸ்வதி கருத்தரிப்பு சிறப்பு மருத்துவர் ஆகியோர் கலந்து கொண்டு மகளிர் ஆரோக்கியம், மகளிருக்கு உடல் மற்றும் மன ரீதியான பிரச்சினைகள், மாதவிடாய் சுழற்சி, பெண்கள் மகப்பேறு காலத்தில் எவ்வாறு இருக்க வேண்டும் போன்ற பெண்கள் நலன் குறித்த கருத்தரங்கில் ஆசிரியைகளுடன் கலந்துரையாடினர்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியைகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் சரோஜா வேலுசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும் வீனஸ் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி முதல்வர் லியோ பெஸ்கி ராவ் மற்றும் ஆசிரியைகளும் கலந்து கொண்டனர். இறுதியாக ஆசிரியை கிருஷ்ணப் பிரியா நன்றி கூறினார்.

---

**IN THE COURT OF VI SMALL CAUSES COURT CHENNAI**
**MCOP No.3665/2020**

Ramamoorthi

Vs

A. Cheellappa and 1 another

To

1. A. Cheellappa
No.1-14/1, Balaraman Street, Srinivasapuram, Guduvanchery S.O., Kanchipuram District – 603 202.

The petitioner herein filed a Motor Accidents Claim Original Petition in MCOP No.3665/2020 against you and another. The said case is listed on 7.4.2025 for filing counter. You are hereby called upon to appear before the VIth Small Causes Court, Chennai on 7.4.2025 by 10.30 a.m. either in person or through your Counsel, failing which the matter will be ecided in your absence

**D.Rajagopal**
Counsel for Applicant

---

**BEFORE THE HON'BLE VII ADDITIONAL FAMILY COURT-CHENNAI**
**HMOP.NO.2728/2024**

R. Balaji ...Petitioner

Vs

R Kavitha ... Respondent

மனுதாரர் தாக்கல் செய்த மேற்கண்ட வழக்கில், கடந்த 17.01.2025 அன்று தாக்கல் செய்த S.S விண்ணப்பத்தின் மூலம் செய்தித்தாளில் வெளியிட மேற்கண்ட மாண்பமை நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நீங்கள் 24.03.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அன்றைய நாளில் நீங்களோ அல்லது உங்களது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகாத பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருதலை பட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும்.

**P. KALAIVANAN**
**N. BALAJI**
Counsel for Petitioner

---

**IN THE COURT OF THE V TH SMALL CAUSES AT MADRAS**
**M.P. No.2 of 2025**
**in**
**M.C.O.P.No.6231 of 2016**

Ashok Kumar ...Petitioner

-Vs-

1. K. Thulasingam
2. The Manager
Shiram General Insurance Co. Ltd., ...Respondents

To,
K.Thulasingam,
S/o.Kumaraswamy
Old No.5, New No.23,
Mettu Street, Vengadamangalam Village, Guduvanchery Post
Chennai - 600048.

**NOTICE**

Please take notice that the above said MCOP case is posted for your appearance before the Court of 5th Small Causes at Chennai on 15.04.2025 at 10.30 a.m. as you are the owner of the Vehicle involved in the accident. You are hereby informed in the accident. You are hereby informed that if you have any objection you may raise on the said date and time by appearing either in person or through your counsel failing which the claim petition will be decided against you in your absence on the same day.

**A.S. VIJAY ANAND**
Counsel for petitioner

---

**BEFORE THE HON'BLE II ADDITIONAL FAMILY COURT AT CHENNAI**
**M.C.NO. 434 OF 2024**

1. Mrs. Vijaylakshmi
(F / 32 Years)
D/o. Anandharao,
2. Minor D.R. Ashvin,
(M/16 years) S/o P.Raju,
Rep.by his Mother and Natural Guardian
Mrs. Vijaylakshmi,
3. D.R. Keerthana, (F / 12 Years)
S/o.P. Raju,
Rep.by his Mother and Natural Guardian
Mrs. Vijaylakshmi,
all are residing at,
No.22, Ekangipuram,
4th E street, Ayanavaram,
Chennai- 600023.
...Petitioners

VS

Mr. P. Raju (M/41 Years)
S/o Pechaihaya,
No. 201, Labour Colony,
1st street, Industrial Estate
Guindy, Chennai - 600032.
...Respondent

In M.C.No.434 of 2024, by Order dated 21.02.2025, The Hon'ble 2nd Additional family court Judge at Chennai has directed the petitioner to serve notice by Paper Publication to you returnable by 24.03.2025. In compliance of the said Order, this Paper Publication is effected and the Respondent whose names and Addresses have been mentioned herein above are put on notice to appear before. The Hon'ble 2nd Additional family court Judge at Chennai on 24.03.2025 at 10.Am, failing which the matter would be decided in your absence.

**Vijaylakshmi**
Petitioner/Party in person

---

**8வது உதவி நீதிபதி**
**மாநகர உரிமையியல் நீதிமன்றம்,**
**சென்னை**
**I.A. No. 1 of 2024**
**in**
**O.S. No. 1378 of 2012**

V. பாலகிருஷ்ண நாயுடு ..மனுதாரர் /வாதி

எதிர்

சந்திரம்மாள் மற்றும் பலர்.
பெறுநர்

1. J. உஷாராணி,
க/பெ. K. ஜெயபிரகாஷ்
எண்.27, கபிலர் தெரு, மதுரா நகர்,
பெரம்பூர், சென்னை–600 011.
2. திருமதி. சாமுண்டீஸ்வரி,
க/பெ. V. பாலகிருஷ்ணநாயுடு,
3. மகாலட்சுமி,
த/பெ. கிருஷ்ணவேணி
4. சாந்தி, த/பெ. கிருஷ்ண்வேணி.
5. விஜயா, த/பெ. கிருஷ்ண்வேணி.
6. பத்மாவதி, த/பெ. கிருஷ்ண்வேணி.அனைவரது வசிப்பிடம் எண்.199, பிராமான தெரு, பாரஞ்சி கிராமம் மற்றும் அஞ்சல், அரக்கோணம் தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம்.

..எதிர்மனுதாரர்கள்

மேற்படி அசல் வழக்கு எண்.1378/2012 தாக்கல் செய்துள்ள அசல் ஆவணங்களை திருப்பிதர வேண்டி மனுதாரர் தாக்கல் செய்த இடைக்கால மனு எண்.1/2023ல் தங்களுக்கு மேற்படி விலாசத்தில் பலமுறை அறிவிப்பு சார்வு செய்ய இயலாத காரணத்தினால் மேற்படி 8வது உதவி நீதிபதி மாநகர உரிமையியல் நீதிமன்றம் சென்னை அவர்களின் ஆணைப்படி செய்திதாள் மூலம் அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. மேற்படி வழக்கானது வருகிற 16.04.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். 16.04.2025 அன்று காலை 10 மணி அளவில் தாங்கள் நேரிலோ (அ) வழக்கறிஞர்வா யிலாகவோ மேற்படி வழக்கில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்படுகிறது, தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு நீங்கள் இல்லாமலே தீர்மானிக்கப்படும்.

R. **சூரியபிரகாஷ்**
மனுதாரர் /வாதி வழக்கறிஞர்.

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் :67/2024**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.R.சுரேஷ்குமார் த/பெ. ராமசாமி, நெ.9c, சின்னகவுண்டர் தெரு, மணிக்பாளையம், ஹவுசிங் யூனிட் அருகில் வாட்டர் டேங்க், வீரப்பன்சத்திரம், ஈரோடு.
2.M.செந்தில்வடிவு த/பெ.மருதமுத்து, க/பெ.கனகராஜ், நெ.6/401, மாருதி நகர், திருச்சி ரோடு, நாமக்கல் 637 001.
3.M.ரவி த/பெ.முத்துசாமி, நெ.78, மேற்கு அம்பேத்கர் தெரு, சூரம்பட்டி அஞ்சல், ஈரோடு வட்டம் & மாவட்டம் 638 009.
4.R.கௌதம், த/பெ.ராஜமாணிக்கம், நெ.1/13, பச்சியம்மன் கோயில் தோட்டம், காரைக்குறிச்சி, புத்தூர், நாமக்கல் 637 014.

பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.6,94,128/ தொடர்பான வழக்கு 27/03/2025அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள்,விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் : 09/2025**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.K.அருள்மணி
த/பெ. குப்புசாமி, புதிய முகவரி: சாத்விகா பிரைவேட் லிமிடெட், பிளாட் நெ.897, முதல் தளம், எச்.பிளாக், 10வது தெரு, அண்ணா நகர், மேற்கு சென்னை. பழைய முகவரி: கதவு எண்:9, நெ.2/3, சாமுண்டீஸ்வரி தெரு, கங்கை நகர், கங்கை பிளாட், அம்பத்தூர், கள்ளிக்குப்பம், சென்னை 53.
2.R.குமார், த/பெ. ராமமூர்த்தி, நெ.47/30A, திருவள்ளுவர் தெரு, அன்பழகன் நகர், செம்பியம், பெரம்பூர், சென்னை 1.

பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,39,000/ தொடர்பான வழக்கு 27/03/2025 அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள்,விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

---

**மேன்மைமிகு சார்பு நீதிமன்றம், திட்டக்குடி**
**MCOP:22/2022**

கொளஞ்சி வகையறா ...மனுதாரர்கள்

/எதிர்/

Swaminathan, S/o Venkatraman,
Old No:29 New No:47A,
4th Cross Street, Evergreen Housing, 2nd Stage Extension, Chinmaya Nagar, Chennai-600092.

...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி வழக்கில் எதிர் மனுதாரர் தங்கள் மீது வாகன விபத்து நஷ்டஈடு கோரி மனு தாக்கல் செய்து தங்கள் தரப்பில் ஆட்சேபனை இருப்பின் தெரிவிக்க வரும் 27.03.2025 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. எனவே தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் வரும் 27.03.2025 அன்று காலை 10.30 மணியளவில் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலமாகவோ அல்லது நேரிலோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்து கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும்.

B. **தரணிதரன்,**
வழக்கறிஞர்

---

**BEFORE THE HON'BLE SUB COURT AT AMBATTUR.**

Suganya S. D/O.C.Malaravan ....Petitioner/Wife.

-VS-

Srinivasan P.S., S/o.Pushpavathi, ....Respondent/Husband.

To,
Srinivasan, S/o.Pushpavathi,
No.6, Nirbani Subba Rao Street,
Near LD Bank,
Ponneri Post &Taluk,
Thiruvallur- 601 204.

The petitioner filed above said divorce petition against you and same was came up before The honble sub court judge at Ambattur on **03.03.2025** the Hon'ble judge has ordered paper publication to you in the above said petition. Kindly take notice and appear before the Hon'ble sub court judge, ambattur on **30.04.25** at **10.30** a.m failing which the above petition would be heard and decided in your absence as exparte.

**A.RAJESWARI KARTHIKEYAN**
**Counsel for Petitioner**

---

*மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடி*
*I.A.No.1/2025*
*in*
*S.R.No.7318/2022*
*in*
*Unreg.A.S.No. /2022*

*1.சுடலி*
*2.சண்முகம்*
*3.நம்பி*

*...மனுதாரர்கள்/ மேல்முறையீட்டாளர்கள்*

*–எதிர்–*

*லெட்சுமி அம்மாள்,*
*க/பெ.வேல்கோனார்,*
*41/101, சோலையப்பன் தெரு,*
*பழைய வண்ணார பேட்டை,*
*சென்னை–21.*

*...எதிர்மனுதாரர்/7–ம் எதிர்மனுதாரர்*

**அறிவிப்பு**

*மனுதாரர்கள்/மேல்முறையீட்டாளர்கள் பக்கம் தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் O.S.No.31/2017 அசல் வழக்கின் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்த மேல்முறையீட்டு I.A.No. 1/2025 S.R.No.7318/2022 IN Unreg.A.S. No. /2022–ல் தாங்கள் வாய்தா தேதியான 04.04.2025 அன்று நேரில் ஆஜராகுவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் காலை 10 மணிக்கு சமூகம் நீதிமன்றம் முன்பு நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்கள் மீது ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.*

***N.மகேஷ் சரவணன், B.A.,LL.B., (Hons)***
**வழக்கறிஞர்**
**தூத்துக்குடி**

---

**அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெட்டின் சான்றிதழ்(கள்) தொலைந்து போனது குறித்த அறிவிப்பு**
**எண்.3, கணபதி காலனி, 3வது தெரு, செனடாப் சாலை அருகில், தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600018**

ராஜஸ்தானில் வசிக்கும் சாயர்குமாரி லுனாவத் ஆகிய நான், மேற்கூறிய நிறுவனத்தில் வைத்திருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளின் பதிவுதாரர் ஆவேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பான பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டதாகவும், நகல் சான்றிதழ்(கள்) வழங்குவதற்காக நிறுவனத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பாக உரிமைகோரல் உள்ள எந்தவொரு நபரும் இந்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நிறுவனத்தின் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் அத்தகைய உரிமைகோரல்களை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையெனில் நிறுவனம் நகல் சான்றிதழ்(கள்) வழங்கும். அதன் பிறகு நிறுவனம் வேறு எந்த உரிமைகோரலையும் ஏற்றுக்கொள்ளாது.

| போலியோ எண். | பங்குதாரர் பெயர் | பங்குகள் எண்ணிக்கை | சான்றிதழ் எண் | குறியீட்டு எண் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 00000081 | சாயர்குமாரி லுனாவத் | 13000 | 82 | 2111501 | 2124500 |

நாள் : 11.03.2025
இடம்: சென்னை
சாயர்குமாரி லுனாவத்

---

**அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெட்டின் சான்றிதழ்(கள்) தொலைந்து போனது குறித்த அறிவிப்பு**
**எண்.3, கணபதி காலனி, 3வது தெரு, செனடாப் சாலை அருகில், தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600018**

ராஜஸ்தானில் வசிக்கும் பிரதீப் குமார் லுனாவத் ஆகிய நான், மேற்கூறிய நிறுவனத்தில் வைத்திருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளின் பதிவுதாரர் ஆவேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பான பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டதாகவும், நகல் சான்றிதழ்(கள்) வழங்குவதற்காக நிறுவனத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பாக உரிமைகோரல் உள்ள எந்தவொரு நபரும் இந்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நிறுவனத்தின் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் அத்தகைய உரிமைகோரல்களை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையெனில் நிறுவனம் நகல் சான்றிதழ்(கள்) வழங்கும். அதன் பிறகு நிறுவனம் வேறு எந்த உரிமைகோரலையும் ஏற்றுக்கொள்ளாது.

| போலியோ எண். | பங்குதாரர் பெயர் | பங்குகள் எண்ணிக்கை | சான்றிதழ் எண் | குறியீட்டு எண் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 00000082 | பிரதீப் குமார் லுனாவத் | 10000 | 83 | 2124501 | 2134500 |

நாள் : 11.03.2025
இடம்: சென்னை
பிரதீப் குமார் லுனாவத்

---

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயிர் மற்றும் உயிர் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதல் ஏற்பு மனு எண் 24/2025**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் தொடர்பான மனுவில் 09.12.2022 அன்று இறந்து போன திரு.கோபி கிருஷ்ணன் அவர்களின் வாரிசுரிமை கோரும் மனு

1. எம். விஜயலட்சுமி, க/பெ. முரளி
நெ. 3/2. செல்லப்ப கிராமணி தெரு, சென்னை – 600007
2. எம் மகேஸ்வரி, க/பெ ஜி. முரளிதரன்
நெ. C–56, 16வது தெரு, பெரியார் நகர், ஜவஹர் நகர்
சென்னை 600082

சென்னை–99 கொளத்தூர் மூன்றாவது மெயின் ரோடு, எண் 57ல் வசித்து வந்து 9.12.2022 அன்று இறந்து போன திரு. கோபி கிருஷ்ணன் அவர்களின் கடன் பத்திரங்களில் ஏதேனும் பாத்தியத்தை கோருகிற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசு உரிமைச் சான்றிதழ் வழங்குவதற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோட்டில் 28.03.2025 அன்று காலை 10:30 மணிக்கு மேற்படி மனு விசாரணையின் போது நடவடிக்கை பார்த்து தங்களது ஆட்சேபனைகளை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறீர்கள்

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11–ம் தேதி சென்னையில் கையொப்பம் இடப்பட்டது.

S. கண்ணன்
உதவி பதிவாளர்
முதல் ஏற்பு பிரிவு1
உயர்நீதிமன்றம்

எம். கெம்ப்ராஜ்
நா. தாரா நாத்.
சென்னை 600104
மனுதாரர் வழக்கறிஞர்கள்

---

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக**
**டிவிஷன் பெஞ்ச் II, சென்னை**
**CP/CAA/3/2025 IN CA(CAA)/42(CHE)/2024**

நிறுவனங்கள் சட்டம், 2013ன் விஷயத்தில்
மற்றும்
நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் விஷயத்தில்
மற்றும்
இடால் பிளாஸ்டிக் காம்பவுண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் பாலிமேக் டூல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் ('திட்டம்') இடையிலான ஒருங்கிணைப்பு திட்டம் விஷயத்தில்

இடால் பிளாஸ்டிக் காம்பவுண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்
(CIN: U24134TN2007PTC062123),
[illegible]

...மனுதாரர் / மாற்றப்படும் நிறுவனம்

**மனு குறித்த அறிவிப்பு**

[illegible]

---

**தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம் முன்பாக**
**டிவிஷன் பெஞ்ச் II, சென்னை**
**CP/CAA/3/2025 IN CA(CAA)/42(CHE)/2024**

நிறுவனங்கள் சட்டம், 2013ன் விஷயத்தில்
மற்றும்
நிறுவனங்கள் சட்டம், 2013ன் பிரிவுகள் 230 முதல் 232 வரை மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் விஷயத்தில்
மற்றும்
இடால் பிளாஸ்டிக் காம்பவுண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் பாலிமேக் டூல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் மற்றும் அந்தந்த பங்குதாரர்கள் மற்றும் கடன் வழங்குபவர்கள் ('திட்டம்') இடையிலான ஒருங்கிணைப்பு திட்டம் விஷயத்தில்

பாலிமேக் டூல்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்
(CIN: U28939TN2008PTC068438),
[illegible]

...மனுதாரர் / மாற்றப்படும் நிறுவனம்

**மனு குறித்த அறிவிப்பு**

[illegible]

---

**படிவம் எண். INC 26**

[illegible]

யுனிகோஸ் ஃபேஷன்ஸ் லிமிடெட்

[illegible]

இடம்: சென்னை
தேதி: 11.03.2025
A25400

---

**அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெட்டின் சான்றிதழ்(கள்) தொலைந்து போனது குறித்த அறிவிப்பு**
**எண்.3, கணபதி காலனி, 3வது தெரு, செனடாப் சாலை அருகில், தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600018**

ராஜஸ்தானில் வசிக்கும் **சீமா லுனாவத்** ஆகிய நான், மேற்கூறிய நிறுவனத்தில் வைத்திருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளின் பதிவுதாரர் ஆவேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பான பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டதாகவும், நகல் சான்றிதழ்(கள்) வழங்குவதற்காக நிறுவனத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பாக உரிமைகோரல் உள்ள எந்தவொரு நபரும் இந்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நிறுவனத்தின் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் அத்தகைய உரிமைகோரல்களை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையெனில் நிறுவனம் நகல் சான்றிதழ்(கள்) வழங்கும். அதன் பிறகு நிறுவனம் வேறு எந்த உரிமைகோரலையும் ஏற்றுக்கொள்ளாது.

| போலியோ எண். | பங்குதாரர் பெயர் | பங்குகள் எண்ணிக்கை | சான்றிதழ் எண் | குறியீட்டு எண் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 00000080 | சீமா லுனாவத் | 6000 | 81 | 2105501 | 2111500 |

நாள் : 11.03.2025
இடம்: சென்னை
சீமா லுனாவத்

---

**அரிஹந்த் பவுண்டேஷன்ஸ் & ஹவுசிங் லிமிடெட்டின் சான்றிதழ்(கள்) தொலைந்து போனது குறித்த அறிவிப்பு**
**எண்.3, கணபதி காலனி, 3வது தெரு, செனடாப் சாலை அருகில், தேனாம்பேட்டை, சென்னை, தமிழ்நாடு, இந்தியா - 600018**

ராஜஸ்தானில் வசிக்கும் மங்கிலால் லுனாவத் (HUF)-ன் கர்தா மங்கிலால் லுனாவத் ஆகிய நான், மேற்கூறிய நிறுவனத்தில் வைத்திருக்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பங்குகளின் பதிவுதாரர் ஆவேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பான பங்குச் சான்றிதழ்(கள்) தொலைந்துவிட்டதாகவும், நகல் சான்றிதழ்(கள்) வழங்குவதற்காக நிறுவனத்திற்கு விண்ணப்பித்துள்ளதாகவும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கூறிய பங்குகள் தொடர்பாக உரிமைகோரல் உள்ள எந்தவொரு நபரும் இந்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் நிறுவனத்தின் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியில் அத்தகைய உரிமைகோரல்களை தாக்கல் செய்ய வேண்டும், இல்லையெனில் நிறுவனம் நகல் சான்றிதழ்(கள்) வழங்கும். அதன் பிறகு நிறுவனம் வேறு எந்த உரிமைகோரலையும் ஏற்றுக்கொள்ளாது.

| போலியோ எண். | பங்குதாரர் பெயர் | பங்குகள் எண்ணிக்கை | சான்றிதழ் எண் | குறியீட்டு எண் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 00000079 | மங்கிலால் லுனாவத் (HUF) | 4000 | 80 | 2101501 | 2105500 |

நாள் : 11.03.2025
இடம்: சென்னை
மங்கிலால் லுனாவத் (HUF)
கர்தா

---

**படிவம் எண் URC-2**
**சட்டத்தின் அத்தியாயம் - XXIன் பகுதி Iன் கீழ் பதிவு செய்வது குறித்த அறிவிப்பை வழங்கும் விளம்பரம்**
**[நிறுவனங்கள் சட்டம் 2013ன் பிரிவு 374 (b) மற்றும் நிறுவனங்கள் (பதிவு செய்ய அங்கீகாரம்) விதிகள், 2014ன் விதி 4(1)ன் படி]**

1. நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 366ன் துணைப்பிரிவு (2)ன்படி, இவ்வறிவிப்பிலிருந்து பதினைந்து நாட்களுக்கு பிறகு ஆனால் முப்பது நாட்கள் காலாவதியாவதற்கு முன் பதிவாளர், மத்திய பதிவு மையம் (CRC), அவர்களிடம் M/s. **சின்னி நம்பி எண்டர்பிரைசஸ் எல்எல்பி** (LLPIN: AAO-4920), என்னும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மை (LLP) நிறுவனத்தை, நிறுவனங்கள் சட்டம் 2013ன் அத்தியாயம் XXIன் பகுதி Iன் கீழ் பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்ய விண்ணப்பம் செய்யப்பட உள்ளது.
2. நிறுவனத்தின் முதன்மைப் பணிகள் பின்வருமாறு:'
1) பிரிண்டர்ஸ், பப்ளிஷர்ஸ், வடிவமைப்பாளர்கள் (கிராபிக் டிசைனிங் மற்றும் கண்காட்சி டிசைனிங் உட்பட), அனிமேஷன், (2D அனிமேஷன், 3D அனிமேஷன் உட்பட), விளம்பரம்/ நிகழ்வுகள்/ பத்திரிகைகள்/ பிறவற்றிற்கான புகைப்படம் எடுத்தல், போட்டோகிராபிக் பிரிண்டர்கள், புகைப்பட லித்தோகிராபர்கள், திரைப்பட தயாரிப்பாளர்கள், தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள், புகைப்பட வகை அமைப்பு கணினிமயமாக்கப்பட்ட டெஸ்க்டாப் பப்ளிஷிங் பிரிண்டிங், விளம்பர முகவர்கள், திரைப்பட ஆடியோ காட்சிகள், வீடியோ புரோகிராமிங்களை தயாரித்தல் மற்றும் படப்பிடிப்பு நோக்கத்திற்காக முழுமையாக பொருத்தப்பட்ட ஸ்டுடியோவை அமைத்தல் மற்றும் அனைத்து வகையான புகைப்பட பொருட்கள் மற்றும்/அல்லது உபகரணங்களுக்கான டீலர்கள் மற்றும் மேற்கூறியவற்றுடன் தொடர்புடைய பிற தொடர்புடைய வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
3. முன்மொழியப்பட்ட நிறுவனத்தின் வரைவு மெமோரண்டம் மற்றும் ஆர்டிகிள் நகலை புதிய எண் 81/1 பழைய எண் 40/2, ஜிஎன் செட்டி சாலை, தி. நகர், சென்னை 600 017, தமிழ்நாடு என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தில் ஆய்வு செய்யலாம்.
4. இந்த விண்ணப்பத்தை எதிர்க்கும் எந்தவொரு நபரும் தங்கள் ஆட்சேபனையை இருபத்தொரு நாட்களுக்குள்ளாக எழுத்துப்பூர்வமாக பதிவாளர், மத்திய பதிவு மையம் (CRC), இந்திய நிறுவன விவகாரங்கள் நிறுவனம் (IICA), மனை எண். 6,7,8, பிரிவு 5, ஐஎம்டி மானேசர், குர்கான் மாவட்டம் (ஹரியானா), பின்கோடு 122050 என்ற முகவரியில் தெரிவிக்கலாம். மேலும் அதன் நகலை நிறுவனத்தின் பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பதாரரின் பெயர்கள்
1. **திரு. ராஜ்குமார் அர்ஜுன் சின்னி நம்பி** (DIN : 08385385)
2. **செல்வி கிருஷிகா ராஜ்குமார்** (DIN : 03069906)

மார்ச் 12, 2025 அன்று தேதியிடப்பட்டது

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் :60/2024**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.K.அன்பழகன்,
த/பெ. கிருஷ்ணமூர்த்தி, நெ.5/80, மேல வீதி, நாச்சியார் கோயில், கும்பகோணம்.
2. P.நந்தினி,
த/பெ. பிச்சை, க/பெ.கந்தசாமி, நெ.21, ரெட்டியார் குளம் தெற்கு, கும்பகோணம். பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.1,46,315/ தொடர்பான வழக்கு 27/03/2025 அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள், விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் : 07/2025**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.C.பரிசுத்தராஜன்
த/பெ. சின்னப்பன்,புதிய முகவரி: வசந்தம் சில்ஸ், நெ.8, ஆதிரெட்டி தெரு, நேர் ஓம்சக்தி கோயில் தெரு, விக்கிரவாண்டி. விழுப்புரம் மாவட்டம்.
2.பழைய முகவரி: நெ.18, வெங்கடேஸ்வரன் நகர், விக்கிரவாண்டி அஞ்சல் & வட்டம், விழுப்புரம் மாவட்டம் 605 652.
3.M.மரியபிரகாசம்
த/பெ. மத்தியாஸ், நெ.2, வெங்கடேஸ்வரன் நகர், விக்கிரவாண்டி அஞ்சல் ரூவட்டம், விழுப்புரம் மாவட்டம் 605 652.
4. P.காமராஜ், த/பெ.பூங்காவனம், நெ.6, செட்டீஸ்வரன் கோவில் தெரு, விக்கரவாண்டி அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் 605 652.
5.E.கோபாலகிருஷ்ணன், த/பெ.ஏழுமலை, நெ.4/395, பள்ளிக்கூடத் தெரு, புதூர் கிராமம், நடுவனந்தநல்லூர் அஞ்சல், திண்டிவனம் வட்டம் விழுப்புரம் மாவட்டம். 604 207.

பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.77,044/ தொடர்பான வழக்கு 27/03/2025 அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள், விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் : 06/2025**
**நாள்: 27/02/2025**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.R.பரிமளா, க/பெ. கொளஞ்சி, த/பெ.ராஜேந்திரன், புதிய முகவரி: B 51, சிலோன் காலனி, நெய்வேலி. பழைய முகவரி: நெ.B51, B பிளாக், ஆர்.எச் சென்டர், இந்திரா நகர், நெய்வேலி 1
2.S.வெங்கடேசன், த/பெ.சாமிகண்ணு, கிழக்கு தெரு, தோப்புக்கொல்லை, மருங்கூர் அஞ்சல், பண்ருட் வட்டம், கடலூர் மாவட்டம் 607 103.
3.S.கொளஞ்சி, த/பெ.சுப்ரமணி, நெ.B51, பி–பிளாக், ஆச்.எச் சென்டர், இந்திரா நகர், நெய்வேலி.

பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.55,908/ தொடர்பான வழக்கு 27/03/2025 அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள்,விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

---

**மைய சீட்டு நிதிச்சட்டம் 1982 பிரிவு 64ன் படி விழுப்புரம் உதவிச்சீட்டு பதிவாளர் நடுவர் தீர்ப்பு மன்றம் முன்னிலை:திருமதி.பெ.இளங்கிளி, உதவிச் சீட்டுப்பதிவாளர், விழுப்புரம்**
**நடுவர் வழக்கு எண் :08/2025**

சீட்டு நடத்துனர்
ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட்
விழுப்புரம் வாதி
1.B.கோபாலகிருஷ்ணன்
த/பெ. பாலசுந்தரம், நெ.89, மெயின் ரோடு, சஞ்சீவிராயன் கோயில் தெரு, நடுவீரபட்டு அஞ்சல், கடலூர் மாவட்டம்–607 003
2.J.ஜெயகாந்தன், த/பெ.ஜீவரத்தினம்,நெ.1/61 மெயின் ரோடு, பெரியகண்ணாடி, சின்னகண்ணாடி அஞ்சல், குறிஞ்சிப்பாடி, கடலூர் மாவட்டம் 607302
3.R.சிவகுமார், த/பெ.ராமசந்திரன், நெ.22A,. வன்னியர்புரம், என்.மூலகுப்பம் அஞ்சல், கடலூர் மாவட்டம் 607102.

பிரதிவாதிகள்

ஜெயப்பிரியா சிட்பண்ட்ஸ் (பி) லிட் விழுப்புரம் கிளை அலுவலகத்தில் என்ற சீட்டு நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பாக்கித் தொகை ரூ.2,45,415/ தொடர்பான வழக்கு 27/03/2025 அன்று காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. மேற்படி தேதியன்று விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் என் முன்னிலையில் நடுவர் தீர்ப்பு மன்றத்தில் ஆஜராகி ஆட்சேபனை இருந்தால் எழுத்து மூலமாக தெரிவிக்க இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. தவறும் பட்சத்தில் 1984ம் வருடத்திய தமிழ்நாடு சீட்டு நிதிகள்,விதி49(4)ன் படி ஒரு தலைபட்சமாக (EXPARTE) தீர்ப்பளிக்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

உதவிச்சீட்டு பதிவாளர்
நடுவர் தீர்ப்பு மன்றம், விழுப்புரம்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை

# ‘யார் அந்த சார்’ என யாருமில்லை: சிறப்பு புலனாய்வு குழுவினர் குற்றப்பத்திரிகையில் புதிய தகவல்

## போனில் ‘சார்’ என சும்மா அழைத்தார்

சென்னை, மார்ச் 12–

**அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் ஞானசேகரன் தவிர மற்றொரு நபருக்கு தொடர்பில்லை' என சிறப்பு புலனாய்வு குழுவினர் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் கோட்டூர்புரத்தை சேர்ந்த ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் மாணவியை மிரட்டும்போது செல்போனில் ஒருவரிடம் சார் என்று கூறி பேசியதாக பரபரப்பு குற்றச்சாட்டு எழுந்தது. யார் அந்த சார்? என்பது தெரிய வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தன.

இது தொடர்பாக, சென்னை ஐகோர்ட் நியமித்த 3 பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகளை கொண்ட சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரித்து சென்னை சைதாப்பேட்டை கோர்ட்டில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். அந்த குற்றப்பத்திரிகையில் ஞானசேகரன் பெயர் மட்டுமே இடம்பெற்றுள்ளது. வேறு யாருக்கும் அதில் தொடர்பு இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது. அந்த குற்றப்பத்திரிகையில் இடம்பெற்றுள்ள தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதன் விவரம் வருமாறு:–

பாதிக்கப்பட்ட 19 வயது மாணவியும் அவரது ஆண் நண்பரும் பல்கலைக்கழக வளாகத்தில் இருந்தபோது இந்த சம்பவம் நடந்துள்ளது. கோட்டூரில் தனது குடும்பத்துடன் வசித்து வந்த 37 வயதான ஞானசேகரன், அடையாறு பாலம் அருகே உள்ள சர்வீஸ் சாலையில் பிரியாணி கடையை நடத்தி வந்தார். அவர் ஏற்கனவே பல குற்றங்களில் ஈடுபட்டிருந்தார்.

### முகத்தை மறைத்து வந்தார்

டிசம்பர் 23ம் தேதி மாலை 7.10 மணிக்கு, கோட்டூர்புரத்தில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்திற்குள் ஒரு தொப்பியை அணிந்து முகத்தை மறைத்து, ஞானசேகரன் நுழைந்தார். வளாகத்தில் தான் இருப்பதற்கான எந்த ஆதாரமோ அல்லது தடயமோ இல்லை என்பதை உறுதிப்படுத்த தனது மொபைல் போனை 'ஏரோபிளேன் மோடில்' போட்டுள்ளார்.

இரவு 7.45 மணியளவில் ஞானசேகரனால் பாதிக்கப்பட்ட மாணவியும் அவரது நண்பரும் ஒரு கட்டடத்தின் படிக்கட்டுகளில் அமர்ந்திருப்பதைக் கண்டார். முதலில், அவர் நண்பரின் தலையில் அடித்து, மாணவியின் கல்லூரி அடையாள அட்டையைப் பறித்தார். பின்னர், பாதிக்கப்பட்ட மாணவியையும், அவரது நண்பரையும், மொபைல்போனில் படம்பிடித்த வீடியோவை டீன், வார்டன் மற்றும் ஊழியர்களிடம் காண்பிப்பதாக மிரட்டினார்.

### போனில் பேசியது என்ன?

இருவரும், ஞானசேகரனிடம் தங்களை விடுவிக்குமாறு கெஞ்சினார்கள். பின்னர், பாதிக்கப்பட்ட மாணவியை காப்பாற்றுவதாகக் கூறி, அவரை அதே இடத்தில் இருக்கச் சொல்லி, அவருடைய நண்பரை அழைத்துச் சென்றார். சில நிமிடங்களுக்குப் பிறகு அவர் திரும்பி வந்து மாணவியின் செல்போனை பிளைட் மோடுக்கு மாற்ற சொன்னார். பின்னர் மாணவியை ஒதுக்குப்புறமான இடத்திற்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். அதை வீடியோவாகவும் பதிவு செய்தார். தான் பல்கலைக்கழக அதிகாரி என்ற தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக யாரிடமோ போனில் பேசுவதாக நடித்து, "சார், நான் மாணவியை எச்சரித்து போக விடுகிறேன்" என்று கூறியுள்ளார்.

மாணவி பெற்றோரின் செல்போன் எண்களையும் பெற்றுக்கொண்டு தான் அழைக்கும் போதெல்லாம் வரவேண்டும் என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினார். மாணவியை பாலியல் வன்கொடுமை செய்த வீடியோவை செல்போனில் மறைத்து வைத்திருந்ததாகவும், பின்னர் அதை அழித்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார். குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட நபர் தனியாக செயல்பட்டு தவறு செய்துள்ளார்.

இவ்வாறு அந்த குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டு இருப்பதாக தெரிய வந்துள்ளன.

### சார் என சும்மா அழைத்தார்

இதுகுறித்து போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஞானசேகரன் பயன்படுத்திய செல்போனின் அழைப்புகளை சிறப்பு புலனாய்வு குழுவினர் ஆய்வு செய்தனர். அவர் மாணவியை மிரட்டுவதற்காக யாருடனோ செல்போனில் பேசுவது போல் நடித்து, அவரை 'சார்' என்று சும்மா அழைத்தார். உண்மையில் சார் என்று யாரும் இல்லை' என்று தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற ஜெ.முருகேசன் – எம்.சுமிதா தம்பதியரின் மகன் எம். சந்தீப் குமார் மற்றும் கே.பி.வாசுதேவன் – டாக்டர் கே.காயத்ரி தேவி தம்பதியரின் மகள் வி.சந்தோஷி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் தங்கம் தென்னரசு, சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், முன்னாள் எம்.எல்.ஏ. சிவாஜி, வேலம்மாள் கல்வி குழுமத்தின் நிர்வாகிகள் எம்.வி. முத்துராமலிங்கம், எம்.வி.எம். வேல்முருகன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரம்

# ஜெகன் மோகனுடன் அமைச்சர் எ.வ.வேலு சந்திப்பு

அமராவதி, மார்ச் 12–

**தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னெடுக்கும் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் பங்கேற்க வாருங்கள் என்று ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் ஆந்திரப் பிரதேசத்தின் முன்னாள் முதல்வருமான ஜெகன்மோகன் ரெட்டியை நேரில் சந்தித்து தமிழக அமைச்சர் எ.வ.வேலு அழைப்பு விடுத்தார்.**



மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பால் தமிழ்நாட்டுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பாக தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தென்மாநிலங்களின் எம்.பி.க்களை உள்ளடக்கிய கூட்டு நடவடிக்கை குழுவை அமைக்க முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பாக 7 மாநிலங்களை சேர்ந்த 29 கட்சி தலைவர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமீபத்தில் கடிதம் எழுதினார்.

இந்த நிலையில், சென்னையில் வருகிற 22ம் தேதியன்று தொகுதி மறுவரையறை குறித்த கூட்டு நடவடிக்கை குழு கூட்டம் நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் பங்கேற்க தென்மாநில அரசியல் கட்சிகளின் தலைவர்களை தமிழக அமைச்சர்கள் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்து வருகின்றனர். அதன்படி ஒடிசா முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக்கை தமிழக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் நேரில் சந்தித்து அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் இன்று ஆந்திர முன்னாள் முதல்வர் ஜெகன் மோகன் ரெட்டியை இன்று நேரில் சந்தித்து ஆலோசனை நடத்திய தமிழக அமைச்சர் எ.வ.வேலு, எம்.பி. வில்சன் ஆகியோர் கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்துள்ளனர்.

அதேபோல், தெலுங்கு தேசம் கட்சியின் மாநிலத் தலைவர் பல்லா சீனிவாசராவுக்கும் அழைப்பு விடுத்தனர்.

### கர்நாடக முதல்வருடன் பொன்முடி சந்திப்பு

பெங்களூருவுக்கு சென்ற தமிழக அமைச்சர் பொன்முடி, எம்பி அப்துல்லா ஆகியோர் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா, துணை முதலமைச்சர் டி.கே. சிவக்குமார் ஆகியோரை நேரில் சந்தித்து கூட்டு நடவடிக்கை குழு கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தனர்.

# பாகிஸ்தான் ரெயில் கடத்தல்: 155 பிணைக் கைதிகள் மீட்பு

## 27 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

இஸ்லாமாபாத், மார்ச் 12–

பாகிஸ்தானில் ரெயிலில் கடத்தப்பட்டவர்களில் 155 பேரை பாதுகாப்பு படையினர் மீட்டனர். துப்பாக்கிச்சூட்டில் தீவிரவாதிகள் 27 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் குவெட்டா நகரில் இருந்து பெஷாவர் நகருக்கு நேற்று காலை ஜாபர் எக்ஸ்பிரஸ் பயணிகள் ரெயில் புறப்பட்டது. இந்த ரெயில் பலுசிஸ்தான் மாகாணம், முஷ்கப் பகுதி சுரங்கப் பாதையில் வந்தபோது தண்டவாளம் வெடிவைத்து தகர்க்கப்பட்டது. இதன் காரணமாக ஜாபர் எக்ஸ்பிரஸ் ரெயில் தடம் புரண்டது.



அப்போது பலுச் விடுதலை படையை (பி.எல்.ஏ.) சேர்ந்தவர்கள், ஜாபர் எக்ஸ்பிரஸ் ரெயிலை சிறைபிடித்தனர். ரெயிலின் குறிப்பிட்ட பெட்டிகளில் பாகிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்கள் பயணம் செய்தனர். அவர்களுக்கும் கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்டது. இதில் 30 பாகிஸ்தான் வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ரெயிலில் இருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட 450 பயணிகளை பயங்கரவாதிகள் சிறைபிடித்தனர். அவர்களை மீட்கும் பணியில் பாகிஸ்தான் ராணுவம் ஈடுபட்டுள்ளது. ராணுவத்துக்கும், பயங்கரவாதிகளுக்கும் நடந்த துப்பாக்கிச் சண்டையில் தற்போதைய நிலவரப்படி 27 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 58 பேர் ஆண்கள், 31 பேர் பெண்கள், 15 பேர் உட்பட 155 பிணைக் கைதிகள் மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் இன்னொரு ரெயில் மூலம் பாலோசிஸ்தான் மாகாணத்தின் கச்சி மாவட்டத்தில் உள்ள மாக் நகருக்கு பத்திரமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். எஞ்சிய பயணிகளை மீட்கும் வகையில் தீவிரவாதிகளுடன் பாதுகாப்புப் படையினர் கடுமையான துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

தீவிரவாதிகளை வீழ்த்தும் பணி தொடரும், அனைத்து பிணைக் கைதிகளும் பத்திரமாக மீட்கப்படுவார்கள் என்று ராணுவம் தெரிவித்துள்ளது.


சனிப் பெயர்ச்சி-2025

திருக்கணித பஞ்சாங்க விதிகளின் படி சனிப் பெயர்ச்சி இவ்வருடம் மார்ச் மாதம் 29-ந் தேதி நடக்கவுள்ளது

உங்களது ராசி

மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, கும்பம், மீனம் ஆக இருந்தால் பரிஹார பூஜை புரிந்துகொள்ளலாம்

(கும்பம், மீனம் மற்றும் மேஷ ராசிகளுக்கு ஏழரை சனி காலம் ஆரம்பம்)

சனிப் பெயர்ச்சி மஹா யாக பரிஹார பூஜைக் கட்டணம் ஒரு நபருக்கு-ரூ.1500/-

நாள்: 29.03.2025 சனிக்கிழமை,

நேரம்: காலை: 10.30 மணி முதல் பூர்ணா ஹுதி- யாகத்தை பூர்த்தி செய்தல்- இரவு 9.40மணிக்கு மேல்

இடம்: A.M.R. கல்யாண மண்டபம், (கவரை தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-33

ஐஸ்வர்யா ஜாதகாலயா

இந்த மஹா யாகத்தை கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர் நடத்தி வைக்கின்றார்

முழு விவரங்களுக்கு

98841 41870 / 9884147630 / 9444686670

(கால் அல்லது வாட்ஸ்அப் செய்யவும்)

அனைவரும் வருக, நற்பலன் பெறுக


### எலான் மஸ்க் நிறுவனத்துடன் ஏர்டெல், ஜியோ ஒப்பந்தம்

வாஷிங்டன், மார்ச் 12–

எலான் மஸ்க்கின் ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் ஏர்டெல் மற்றும் ஜியோ ஒப்பந்தம் செய்துள்ளது.

அமெரிக்க விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸுக்கு சொந்தமான ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள், சர்வதேச அளவில் தொலைத்தொடர்பு சேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இணைய சேவையை இந்தியாவுக்குள் அறிமுகம் செய்வதற்கான முயற்சியில் கடந்த ஓராண்டுக்கு மேலாக அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்க் ஈடுபட்டுள்ளார். தற்போது முதல் நிறுவனமாக ஏர்டெல் நிறுவனத்துடன் ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள் ஒப்பந்தம் செய்துள்ளதாக நேற்று அறிவிப்பு வெளியானது.

இதனை தொடர்ந்து, ஜியோவும் ஸ்டார்லிங்கின் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளதாக அறிவித்துள்ளது. இந்த இரு நிறுவனங்களும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ள பட்டதையடுத்து, இரு நிறுவனங்களின் பங்குகளும் உயர்ந்துள்ளன.






Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600024 on behalf of M/s. Newsmen Associates Private Limited
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733910, Email : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு இ–மெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.